தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹ 10/- மலர் 16 இதழ் 06 அக்டோபர் 2014 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

கல்வியறிவு பெற்ற பெண்களே நல்ல குடும்பத்தை, சமுதாயத்தை, நாட்டை உருவாக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு சுய உதவிக் குழுக்களின் மகளிர் அனைவரும் பெண் கல்விக்கு முக்கியத்துவம் தரும் செயல்களில் ஈடுபட வேண்டும். நீங்கள் நினைத்தால் எதையும் சாதிப்பீர்கள்

மாதந்தோறும் உங்களை முற்றம் இதழின் வாயிலாக சந்தித்து பல்வேறு விஷயங்களை பகிர்ந்து கொள்வது எனக்கு மிகவும் மகிழ்ச்சியான செயலாக இருக்கிறது. ஆணுக்கு நிகராக பெண்களும் சாதனைகளைப் படைக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததுதான். ஆனால் குக்கிராமத்தில் வசிக்கும் சுய உதவிக் குழுப் பெண்ணும் சாதனைகளை படைக்கிறார்கள் என்பது நமக்கு மகிழ்ச்சியும் பெருமையும் அளிக்கக் கூடிய செய்தியாகும்.

அரசு தீட்டும் திட்டங்கள் அனைத்தும் மக்கள் நலனை நோக்கமாகக் கொண்டே அமைந்துள்ளன. அதிலும் பெண்களின் நலவாழ்விற்கு முக்கியத்துவம் தரும் திட்டங்கள் அதிகம் செயல்படுத்தப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். அந்தத் திட்டங்கள் அனைத்துப் பகுதி மகளிருக்கும் சென்றடையச் செய்வதில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும், புதுவாழ்வு திட்டமும் முனைப்புடன் செயலாற்றி வருகின்றன என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

வீட்டை சிறப்பாக நிர்வாகிக்கும் பெண்களால்தான் நாட்டையும் சிறப்பாக நிர்வாகிக்க முடியும் என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட ஒரு விஷயமாகும். ஆனால் ஆண்களுக்கு நிகராக பல சாதனைகளைப் பெண்கள் படைத்தாலும், இன்றும் ஒரு சில இடங்களில் அவர்கள் வன்முறைக்கு ஆளாகும் நிலை நிலவி வருவதை காண்கிறோம். இன்று நம்மைச் சுற்றி நிகழும் பல்வேறு நிகழ்வுகளில் நல்லதும் தீயதும் கலந்தே இருக்கின்றன. அறிவினை வளர்க்கும் அறிவியல் சாதனங்கள் முதல் அடுப்பங்கரையில் பயன்படுத்தும் பொருட்கள் வரை நன்மைக்கும் தீமைக்கும் வழிவகுக்கின்றன. எனவே பெண்கள் விழிப்புணர்வு பெற்றவர்களாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

சுய உதவிக் குழு இயக்கம் இன்று வெற்றிகரமாக செயல்படுவதற்கு முக்கிய காரணம் நீங்கள்தான். உங்களால் மட்டுமே எதையும் சாதிக்க முடியும். பெண்களுக்கு எதிராக ஏவப்படும் வன்முறைகளைக் களைய நீங்கள் போராடி வருகிறீர்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். உங்களுக்கு உதவ மகளிர் திட்டமும் புதுவாழ்வு திட்டமும் என்றும் துணை நிற்கும் என்பதை கூறிக் கொள்வதில் எனக்கு பெருமைதான்.

‘அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு’ என்று சொன்னவர்கள் இன்று உங்களின் வளர்ச்சி கண்டு தலைகுனிந்து வெட்கி நிற்கின்றனர். நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்கள். உங்களால் நமது இயக்கமும் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றி நீடித்து, நீங்கள் மேலும் வளர இன்னும் பல தடைகளைத் தகர்க்க வேண்டும். இதற்கு உங்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் வழங்க நாங்கள் இருக்கிறோம் என்று கூறி, நீங்கள் மேலும் மேலும் சிறப்பான வளர்ச்சி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

மேலாண்மை இயக்குநர்

சிறப்புகள் நிறைந்த வேலூர் கோட்டை **4**

வளரிளம் பெண்களுக்கான ஊட்டச் சத்து உணவுகள்... **8**

7 அஞ்சறைப் பெட்டி...

16 சேமிப்பு சிக்கனம்

திருமதி. உஷா அனந்தசுப்பிரமணியன்

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

எங்களைப் போன்ற பெண்களுக்கு பயனளிக்கும் பல்வேறு செய்தி களையும் தாங்கி வருகிறது முற்றம் இதழ். ஒவ்வொரு மாதமும் இடம் பெறும் சிறப்பு நாட்கள் குறித்த தொகுப்பு, மருத்துவக் குறிப்பு, சட்டம், வெற்றிக் கதை போன்றவை பெண்களின் சிறந்த தோழி முற்றம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

திருமதி. புஷ்பா சுவாமிநாதன்
கடப்பேரி, தாம்பரம் சானடேரியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

ஏழை எளிய மக்கள் வாழ்வில் வளம் பெற வேண்டும் என்ற நோக்கில், தொழிற்பயிற்சிகள் வழங்கி, வங்கிக் கடன் பெற்றுத் தந்து, சுய தொழில் மேற்கொண்டு, பொருளாதார வளர்ச்சி அடைய உறுதுணையாக இருந்து வரும் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளை தொடர்ந்து வெளியிட்டு வரும் முற்றம் மேலும் சிறப்பாக செயல்பட வாழ்த்துகள்.

திருமதி. ஜெயந்தி கண்ணன், எம்.ஏ., எம்.எட்.,
ஊக்குநர், கவிகார்த்திகா மகளிர் குழு,
மங்களம் கிராமம், திருவண்ணாமலை மாவட்டம்.

புதுவாழ்வுத் திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகளையும், அவைகளின் மூலம் பயன் பெற்ற ஏழை எளிய மக்களின் வெற்றிக் கதைகளையும் சுவைபட வண்ணப்படங்களுடன் மாதந்தோறும் தொகுத்து தரும் முற்றம் இதழ் மகளிர் சுய உதவிக் குழுப் பெண்களுக்கு நல்ல வழிகாட்டி.

திருமதி. காந்திமதி சம்பு,
இந்திரா மகளிர் சுய உதவிக் குழு,
உடையாப்பட்டி, சேலம் மாவட்டம்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வில் வளம் சேர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளையும், பயன் பெற்றவர்களின் வெற்றிக் கதைகளையும் மாதந்தோறும் வண்ணப்படங்களுடன் வெளியிட்டு வருகிறது முற்றம் மாத இதழுக்கு எங்களின் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி. லதா அய்யப்பன்,
நேரு மகளிர் சுய உதவிக் குழு,
வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 16 இதழ் 06 அக்டோபர் 2014
விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
முனைவர் எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
முனைவர் ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்
எம். மாதவி
கூடுதல் இயக்குநர்
எல். ராஜா
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
கா. சுஜாதா ஜேக்கப்
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
ப. கலைமதி
மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

நாம் எதிர் நோக்கும் பருவமழை...

தமிழகத்தின் தண்ணீர் பிரச்சனையைத் தீர்ப்பதில் வடகிழக்கு பருவமழையின் பங்களிப்பே அதிகம். தென்மேற்கு பருவமழையால் கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநிலங்கள் பெருமளவில் மழைநீரை பெருகின்றன. அதிலிருந்து சிறிதளவு நீர் மட்டுமே தமிழகத்திற்கு கிடைக்கிறது. மூன்று மாநிலங்களும் மழை நீரை பெரிய அணைகளில் தேக்கி வைத்து ஆண்டு முழுவதும் பயன்படுத்தி பயனடைகின்றன.

வடகிழக்கு பருவமழையை பெரிய அளவில் நம்பியிருக்கும் தமிழகம், பருவமழை தவறும்போதெல்லாம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்படுகிறது. இப்பொழுதெல்லாம் பருவமழை ஒரு சில நாட்கள் மட்டுமே பலமாக பெய்து, வெள்ளமாக உருவெடுத்து வேகமாகச் சென்று வீணாகக் கடலில் கலந்து விடுகின்றது. இதனால் பூமியில் தண்ணீர் ஊற்றெடுப்பதற்கான வாய்ப்பே இல்லாமல் போய் விடுகிறது. மாதக்கணக்கில் பல நாட்களாக சிறுக சிறுக மழை பெய்தால் தான் மழை நீர் பூமிக்கடியில் தங்குவதற்கான வாய்ப்பு இருக்கும்.

இன்றைய காலகட்டத்தில் குறைந்த நாட்களில் கிடைக்கும் மழை நீரை சேமித்து வைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. வீடுகளில் மழை நீர் சேமிப்பை கட்டாய கடமையாக மேற்கொள்ள வேண்டியுள்ளது தற்போதைய அவசிய நடவடிக்கையாகும்.

ஆறுகளிலும், ஓடைகளிலும், கால்வாய்களிலும் ஆங்காங்கே தடுப்பணைகளைக் கட்டி, அவற்றில் தண்ணீரை தேக்கி வைத்து நிலத்தடியில் ஊற செய்து, நிலத்தடி நீரை அதிகரிக்கச் செய்ய வேண்டியுள்ளது. நம்மிடம் உள்ள நீர்நிலைகளை உடனே பழுது பார்த்து பராமரிப்பது நமது அத்தியாவசியக் கடமைகளில் முக்கியமான ஒன்றாகும்.

ஹுட் ஹுட் புயல் அந்தமான் அருகே உருவாகி வடமேற்கை நோக்கி நகர்ந்து ஒடிசா மற்றும் ஆந்திர மாநிலங்களை தாக்கி மிகப்பெரும் சேதத்தை விளைவித்திருக்கிறது. இலட்சக்கணக்கான மக்கள் ஆயிரக்கணக்கான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். புயல் வருவதற்கு முன் மேற் கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், மீட்பு குழுவினரால் எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளும் பாராட்டுதலுக்குரியது.

இயற்கைப் பேரிடரை யாரும் தடுக்க முடியாது. ஆனால் அதனால் ஏற்படும் துன்பங்களை குறைத்துக் கொள்ள முடியும். எனவே இயற்கைப் பேரிடர்களை எவ்வாறு எதிர்கொள்வது என மக்கள் முன்கூட்டியே திட்டமிட வேண்டியது தற்போது அவசியமாகிறது.

இந்தியப் பிரதமர் அவர்கள், பேரிடர் இன்னல் குறைப்பிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருவது வரவேற்கத்தகுந்த ஒன்றாகும். ஒரு மணி நேரத்திலோ அல்லது ஒரு நாளிலோ வரும் பேரிடரால் ஏற்படும் பாதிப்புகளை சரி செய்து, சுமூகமான வாழ்விற்கு திரும்ப பல ஆண்டுகாலமும், பெரும் பொருளாதாரமும் அவசியமாகிறது என்பதை அனைவரும் உணர வேண்டும்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

உலக நீரிழிவு நோய் தினம்–நவம்பர் 14

உடல் நலம் காத்திடுவோம்...

உலகை அச்சுறுத்தும் நோய்களுள் ஒன்றான நீரிழிவு நோய் (சர்க்கரை நோய்) குறித்த விழிப்புணர்வை அனைவரும் பெற வேண்டும் என்ற நோக்குடன், உலக நீரிழிவு நோய் தினம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 14ஆம் தேதி அனுசரிக்க வேண்டும் என 2006ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 14ஆம் தேதி உலக நீரிழிவு நோய் தினம் அனுசரிக்கப்படுகிறது. நீரிழிவு நோய்க்குப் பயன்படுத்தும் இன்சுலின் மருந்தினை சார்ல் பெஸ்ம்ட் என்பவருடன் இணைந்து 1921ஆம் ஆண்டு பிரெடரிக் பான்ரிங் என்பவர் கண்டுபிடித்தார். இவரது பிறந்த தினத்தின் நினைவாகவே இன்றைய நாள் நினைவு கூரப்பட்டு வருகிறது. உலகில் ஏறத்தாழ 150 நாடுகளில் உள்ள மக்கள் ஒன்றிணைந்து இந்நோய் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். சர்வதேச நீரிழிவு நோய் சம்மேளனத்தினாலும் உலக சுகாதார நிறுவனத்தினாலும் 1991 ஆண்டு முதல் நீரிழிவு தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ■

ஜவகர்லால் நேரு பிறந்த தினம்–நவம்பர் 14

குழந்தைகள் தினம்...

உலகின் சிறப்பு வாய்ந்த தினங்களுள் மிகவும் முக்கியமானது குழந்தைகள் தினம். குழந்தைகளை மகிழ்விப்பதற்காகக் கொண்டாடப்படும் இந்த தினம் பல்வேறு நாடுகளில் பல்வேறு தினங்களில் கொண்டாடப்படுகிறது. குழந்தைகள் மீது அன்பு மழை பொழிந்த மறைந்த பிரதமர் பண்டித ஜவகர்லால் நேருவின் பிறந்த நாளான நவம்பர் 14 அன்று இந்தியாவில் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது. அதேசமயம் சர்வதேச குழந்தைகள் தினம் நவம்பர் 20 அன்று அனுசரிக்கப்படுகிறது.

நாட்டின் எதிர்காலம் குழந்தைகள் கையில்தான் இருக்கிறது என்றும், குழந்தைகளிடம் ஆண் பெண் என்ற பேதம் பார்க்கக் கூடாது என்றும் நேரு அவர்கள் அடிக்கடி சொல்லுவார். குழந்தைகளுக்கு பாதுகாப்பான அன்பான சூழ்நிலை அமைய வேண்டும் என்று விரும்பினார். குழந்தைகள் அவரை நேரு மாமா என்றே அழைத்தார்கள்.

நேரு மிகச் சிறந்த பேச்சாளர், அவர் எழுதிய தி டிஸ்கவரி ஆப் இந்தியா மற்றும் ஆட்டோபயாகிராபி புத்தகங்கள் உலகப் புகழ் பெற்றவை. ‘குழந்தைகளுடன் இருப்பதை நான் விரும்புகிறேன். அவர்களுடன் பேச விரும்புகிறேன். ஏன்... விளையாடவும் விரும்புகிறேன். அப்படி விளையாடும் போது, நான் வயதானவன் என்பதை மறந்து விடுகிறேன். குழந்தைப் பருவம் மாறி நீண்டகாலம் ஆகிவிட்டது என்பதையும் மறந்து விடுகிறேன். ஆனால் நான் எழுத உட்காரும் போது, என் வயதும் தூரமும் குழந்தைகளாகிய உங்களிடமிருந்து என்னை பிரித்து விடுகின்றன. வயதானவர்கள் இளையோருக்கு நல்ல அறிவுரைகளை வழங்கும் பழக்கத்தை கடைபிடிக்க வேண்டும்...’ என்று குழந்தைகளுக்கு அவர் எழுதிய கடித்தில் குறிப்பிட்டுள்ளார். ■



அனைத்துலக மாணவர் நாள்–நவம்பர் 17

மாணவர் எழுச்சி...

அனைத்துலக மாணவர் நாள் (International Students’ Day) என்பது பன்னாட்டு ரீதியில் மாணவர் எழுச்சியை உலகளவில் நினைவூட்ட ஆண்டுதோறும் நவம்பர் 17ஆம் நாளன்று இடம்பெறும் நிகழ்வாகும். 1939ஆம் ஆண்டில் இதே நாளில் செக்கோசிலோவாக்கியாவின் தலைநகர் பிராகில் சார்ல்ஸ் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற மாணவர் போராட்டம் நாசிப் படைகளினால் நசுக்கப்பட்டது, போராட்டத்தின் முடிவில் ஜான் ஓப்லெட்டல் மற்றும் ஒன்பது மாணவர் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டது மற்றும் செக்கோசிலோவாக்கியா ஆக்கிரமிப்புக்குள்ளானது போன்ற நிகழ்வுகளின் நினைவாக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. ■

வேலூர் கோட்டை மிகச் சிறந்த போர் அரண்களுடன் அமைக்கப்பட்ட கோட்டையாகும்.

சிறப்புகள் நிறைந்த வேலூர் கோட்டை

ஒரே ஊரில் மூன்று மலைக் கோட்டைகளையும், ஒரு தரைக் கோட்டையும் உடைய வேலூர் நகரில் அமைந்துள்ள கோட்டைக்கு பல சிறப்புகள் உண்டு. வானளவிய மதிற் சுவர்கள், மலைக்க வைக்கும் சுற்றளவு, கோட்டைக்குள் மற்றொரு கோட்டை போல் மூன்று கொத்தளங்கள், பல நூறாண்டு காலமாக அசையாமல் நிற்கும் உறுதி என அக்கோட்டையின் சிறப்புகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

மன்னர்கள் வரலாறு, இந்தியாவின் சுதந்திர போர் வரலாறுகளை சொல்லும் வரலாற்று பெட்டகமாக காலங்களைக் கடந்தும் கம்பீரமாய் நிற்கிறது வேலூர் கோட்டை. விஜயநகரப் பேரரசின் பிரதிநிதியாக இருந்த பொம்மு நாயக்கர் என்பவரால் கி.பி. 1566ல் வேலூர் கோட்டை கட்டப்பட்டது. தென்னிந்தியாவிலேயே மிகச் சிறந்த போர் அரண்களுடன் கட்டப்பட்ட இந்தக் கோட்டை விஜயநகரப் பேரரசின் வேலூர் மண்டலப் பகுதிகளுக்கான பாதுகாப்பு அரணாகவும் விளங்கியது.

தலைக்கோட்டைப் போரில் விஜயநகரம் வீழ்ந்தபின் அப்பேரரசின் அரசர்கள் முறையே தங்கள் தலைநகர்களை பெனுகொண்டா, சந்திரகிரி மற்றும் வேலூரில் அமைத்துக் கொண்டனர். இக்கோட்டை சுமார் மூன்று நூற்றாண்டுகளாக விஜயநகரப் பேரரசின் இறுதி அரசனான மூன்றாம் அரங்கன் என்பவரின் காலம் வரை தலைநகரக் கோட்டையாக இருந்தது.

கருங்கல்லால் கட்டப்பட்ட இந்தக் கோட்டையைச் சுற்றிலும் பாதுகாப்பு அரணாக சுமார் 64 அடி ஆழம் கொண்ட அகழியும், மரப்பாலமும், அகழியில் நிறைந்திருக்கும் நீரில் பயங்கரமான முதலைகளும் நிறைந்து இருந்துள்ளது இந்தக் கோட்டையாகும்.

இக்கோட்டையின் முன்பகுதி சுவர் அழகிய கருங்கல் சிற்ப வேலைபாடுகளுடன் அம்பெய்யும் மாடம், கூர்மையான தாமரைப் பூ வடிவம் கொண்ட கொத்தளங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. அதன் உட்சுவர் தஞ்சைப் பெரிய கோவிலின் மதில் பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கும் உட்பகுதியில் யானை அல்லது தேர் செல்லக் கூடிய அளவில் சுமார் 12 அடி அகலம் கொண்ட உயர்ந்த மண் பாதை போன்ற சுவர் அமைந்துள்ளது.

இக்கோட்டைக்குள் கி.பி. 1599ஆம் ஆண்டு பொம்மு நாயக்கரால் கட்டப்பட்ட அகிலாண்டேஸ்வரி சமேத ஜலகண்டேசுவரர் கோவில் உள்ளது. இந்து அரசர்களின் ஆட்சி முடிந்து இசுலாமிய நவாபுகளின் ஆட்சி தொடங்கிய பின்பு 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மசூதியும் உள்ளது. அதில் ஒரே நேரத்தில் இரண்டாயிரம் பேர் வரை அமர்ந்து தொழுகை செய்யலாம். பின்னர் கி.பி. 1846ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சியில் புனித ஜான் தேவாலயம் கட்டப்பட்டது.

கோட்டைக்குள் திப்பு மகால், ஐதர் மகால், பாதுஷா மகால், பேகம் மகால், கண்டி மகால் என்று அழைக்கப்படும் கட்டிடங்கள் உள்ளன. கி.பி. 1760ஆம் ஆண்டு முதல் இந்தியா விடுதலை பெறும் வரை இக்கோட்டை ஆங்கிலேயர் வசம் இருந்தது.

இக்கோட்டையில் மராட்டிய மன்னர் திப்பு சுல்தானின் குடும்பத்தினர் சிறை வைக்கப்பட்டிருந்தனர். இலங்கை கண்டி மாகாணத்தின் கடைசி அரசரான

வேலூர் நகரின் மையத்தில் 133 ஏக்கர் பரப்பளவில் வேலூர் கோட்டை அமைந்துள்ளது. இந்தக் கோட்டையை ஆங்கிலேயர்கள் ஆயுதக் கிடங்காகப் பயன்படுத்தினர். ஆங்கிலேயருக்கு எதிராக முதல் கிளர்ச்சி இந்தக் கோட்டையில்தான் துவங்கியது. கி.பி. 1760ஆம் ஆண்டு முதல் இந்தியா விடுதலை பெறும் வரை இக்கோட்டை ஆங்கிலேயர் வசம் இருந்தது.



கட்டுரை

ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் மற்றும் அவரது மனைவி யுடன் இக்கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்ததாக வரலாறு கூறுகிறது. மேலும் விஜயநகரப் பேரரசின் அரசராக இருந்த ரங்கராயர் இந்தக் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்தார்.

கி.பி. 1806ஆம் ஆண்டு இக்கோட்டையில்தான் முதன்முதலில் ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சிதுவங்கியது.ஆங்கிலேயர் படையில் இருந்த இந்து மற்றும் இஸ்லாமிய சிப்பாய்கள் இணைந்து திப்புசுல்தானின் வாரிசுகள் தலைமையில் கிளர்ச்சி செய்தனர். கோட்டையில் இருந்த ஆங்கிலேய அதிகாரிகள் கொல்லப்பட்டனர். கோட்டையைக் கைப்பற்றிய கிளர்ச்சியாளர்கள் திப்பு சுல்தானின் கொடியினை ஏற்றினர். இருப்பினும் சில மணி நேரங்களிலேயே ஆங்கிலேயர்கள் கிளர்ச்சியை அடக்கிக் கோட்டையை மீட்டனர்.

தற்போது இக்கோட்டையில் காவல்துறை பயிற்சி கல்லூரி, வட்டாட்சியர் அலுவலகம், பத்திரப் பதிவு அலுவலகம் என பல்வேறு அரசு துறைகளின் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநில அரசின் தொல்பொருள் அருங்காட்சியகம், மத்தியத் தொல்பொருள் துறையின் அருங்காட்சியகம், திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் ஒரு பிரிவு ஆகியன இக்கோட்டையினுள் செயல்பட்டு வருகின்றன. கோட்டையில் உள்ள அருங்காட்சியகத்தில் வரலாற்று காலத்தில் பயன்படுத்திய பல்வேறு பொருட்களை காட்சிக்கு வைத்துள்ளனர்.

கோட்டையைச் சுற்றியுள்ள அகழியில் சுற்றுலாத் துறை மற்றும் தொல்பொருள் துறையின் சார்பில் படகு சவாரி நடைபெற்று வருகிறது. கோட்டைக்கு வெளியே மூன்று இடங்களில் அழகிய பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாலை நேரத்தில் அலங்கார ஒளி விளக்குகள் ஒளி வீச கோட்டை காட்சி தருகிறது. ஜலகண்டேசுவரர் கோவில் திருவிழாக்களுக்கு வரும் பக்தர்கள், கோட்டையைச் சுற்றிப் பார்க்க வருகை தரும் மக்கள் கூட்டம் என இப்போதும் கோட்டை உயிர்ப்புடனே விளங்கி வருகிறது. ■

வேலூர் கோட்டையின் சிறப்புகள்

வேலூர் நகரின் மையத்தில் 133 ஏக்கர் பரப்பளவில் வேலூர் கோட்டை அமைந்துள்ளது. இந்தக் கோட்டையை ஆங்கிலேயர்கள் ஆயுதக் கிடங்காகப் பயன்படுத்தினர். ஆங்கிலேயருக்கு எதிராக முதல் கிளர்ச்சி இந்தக் கோட்டையில்தான் துவங்கியது. தென்னிந்தியாவின் முதல் அரபுக் கல்லூரியான ஜாமி ஆ பாக்கியத்துல்ல கல்லூரி இந்தக் கோட்டையினுள் அமைந்துள்ளது.

கோட்டையின் தென்கிழக்கு மூலையில் கோட்டை உச்சியில் தேசியக் கொடி ஏற்ற 100 அடி உயர கொடிக்கம்பம் அமைக்கப்பட்டுள்ளது. கோட்டைக்கு வெளியே சிப்பாய் புரட்சியின் விளைவாக நினைவுத் தூண் அமைக்கப்பட்டுள்ளது. வேலூர் கோட்டை வரலாற்றைப் போற்றும் வகையில் வேலூர் புரட்சி நடந்த 200ஆவது ஆண்டை போற்றும் வகையில் 2006ஆம் ஆண்டு சிறப்பு தபால் தலை வெளியிடப்பட்டது.

கி.பி. 1605ஆம் ஆண்டு இக்கோட்டைக்கு வருகை தந்த ஐரோப்பிய பயணியான ஜாக் டி கோட் என்பவர், ‘இது போன்ற கோட்டையை தான் எங்கும் பார்த்ததில்லை’ என்று குறிப்பிட்டுள்ளார்.

மகளிர் மேளா 2014

நவராத்திரி

விற்பனைக் கண்காட்சி நிறைவு விழா

கண்காட்சியில் சிறப்பாக அரங்குகள் அமைத்து அதிக அளவில் பொருட்களை விற்பனைச் செய்த குழுக்களுக்கு பரிசளிக்கும் விழா

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திடும் நோக்கிலும், விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடவும், ஆண்டுதோறும் கிருஸ்துமஸ், பொங்கல், புத்தாண்டு, கோடை விடுமுறை, நவராத்திரி மற்றும் தீபாவளி ஆகிய விழாக்காலங்களில் சென்னையில் மகளிர் மேளா சிறப்பு கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

அதன் ஒருபகுதியாக சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மகளிர் மேளா 2014 – நவராத்திரி விற்பனைக் கண்காட்சி 12.09.2014 முதல் 06.10.2014 வரை நடைபெற்றது. இக்கண்காட்சியில் 32 மாவட்டங்களில் இருந்தும் மகளிர் திட்டத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், புதுவாழ்வு திட்டம் மற்றும் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் (IFAD) கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் இக்கண்காட்சியில் விற்பனை அரங்குகள் அமைத்து தங்களின் உற்பத்திப் பொருட்களை 55,50,384/– ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளனர்.

இக்கண்காட்சியில் சிறப்பாக அரங்குகள் அமைத்து, அதிக அளவில் பொருட்களை விற்பனைச் செய்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பரிசளிக்கும் விழா 07.10.2014 அன்று சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள

நிகழ்வு

சுய உதவிக் குழுக்கள் இக்கண்காட்சியில் விற்பனை அரங்குகள் அமைத்து தங்களின் உற்பத்திப் பொருட்களை 55,50,384/– ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளனர்.

அன்னை தெரசா மகளிர் வளாகத்தின் கூட்ட அரங்கில் நடைபெற்றது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் சுய உதவிக் குழுக்களுக்குப் பரிசுகளை வழங்கி பாராட்டினார்கள்.

12.09.2014 முதல் 06.10.2014 வரை நடைபெற்ற மகளிர் மேளா 2014 நவராத்திரி கண்காட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை அதிகம் விற்பனை செய்த தஞ்சாவூர் தாமரை சுய உதவிக் குழு முதல் பரிசினையும், காஞ்சிபுரம் ஸ்ரீ ரேணுகாம்பாள் மகளிர் சுய உதவிக் குழு இரண்டாம் பரிசினையும், திருப்பூர் தமிழ்தென்றல் சுய உதவிக் குழு மூன்றாம் பரிசையும் பெற்றன.

காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்டத்தை சேர்ந்த வெள்ளி விழா மகாத்மா காந்தி சுய உதவிக் குழு மற்றும் திருநெல்வேலி பேன்சி ஆயத்த ஆடை கூட்டமைப்பினைச் சேர்ந்த சுய உதவிக் குழு ஆகியவை முறையே முதல் மற்றும் இரண்டாம் பரிசும் பெற்றன.

நவராத்திரி விற்பனைக் கண்காட்சியில் சிறப்பாக பணியாற்றிய தஞ்சாவூர் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்தின் மேலாளர், சென்னை மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சமுதாய வள பயிற்றுநர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. ■

அஞ்சறைப் பெட்டி...

அன்றாட வாழ்வில் சமையல் அறையில் பயன்படுத்தப்பட்டு வரும் பல பொருட்கள் உடல் நலத்தை தந்து வாழ்க்கையை மணக்கச் செய்பவையாகும். அஞ்சறைப் பெட்டியில் உள்ள பொருட்களைப் பற்றி பார்ப்போம்.

மஞ்சள்

மங்களகரமான ஒன்றாக காலம் காலமாக கருதப்பட்டு வரும் மஞ்சள் சிறந்த கிருமிநாசினியாகும். வயிற்றுப்புண்ணைப் போக்கி, தோல் அழகை மெருகாக்க உதவுகிறது.

மல்லி

பித்தத்தை அகற்றுவதில் மிகச் சிறந்த மருந்தாக மணக்கும் மல்லி செயல்படுகிறது. உணவை சமநிலைப்படுத்துவதோடு உடல் நிலையையும் சீராக்கும் தன்மையுடையது.

சீரகம்

தாய்மையடைந்த பெண் முதல் அனைத்துப் பெண்களுக்கும், ஆண்களுக்கும் உடல் உஷ்ணத்தைக் கட்டுப்படுத்த உதவி உடல் நலத்தை சீராக்கும்.

கசகசா

கரகரவென இருக்கும் கசகசா வயிற்றுவலியைப் போக்கும் தன்மையுடையது. நரம்புகளை இரும்பாக்கும். மூளைக்கு பலத்தைத் தருவதுடன், நல்ல உறக்கத்தையும் ஏற்படுத்தும்.

மிளகு

சாப்பிடும் போது காரமாக இருக்கும் மிளகு இரத்த விருத்தியை ஏற்படுத்தி இரத்த ஓட்டத்தையும் சீராக்கும். மிளகு சாப்பிடும்போது காட்டமாக இருந்தாலும். இரத்த விருத்திக்கு மிகவும் நல்லது. இரத்த ஓட்டத்தையும் சீராக்கும்.

கிராம்பு

தசைப் பிடிப்பு, நெஞ்சு சளி, பல்வலி, ஈறு வலியை போக்குவதிலும் கிராம்பு சிறப்பாக செயல்படுகிறது. இதை தினமும் உணவில் சேர்ப்பது நல்லது. அசைவ உணவுக்கு மணமும் சுவையும் தரும். ■

நம் நாட்டைப் பொறுத்தவரை வளரிளம் பெண்கள் அதிக அளவில் சத்துக் குறைபாட்டுக்கு ஆளாகிறார்கள்.

வளரிளம் பெண்களுக்கான ஊட்டச் சத்து உணவுகள்...

பெண்கள் எல்லோரும் அழகு மட்டும் போதாது அதற்கேற்றவாறு உடல் எடையும் இருக்க வேண்டும் என விரும்புவார்கள். ஒல்லியாக இருப்பவரையும் குண்டாக இருப்பவரையும் யாரும் அழகு என்று குறிப்பிட மாட்டார்கள். எல்லாப் பெண்களும் உடலுக்கேற்ற அளவு எடை வேண்டும் என்றுதான் விரும்புவார்கள். ஆனால் ஊட்டச்சத்துக் குறைபாடால் பெரும்பாலான பெண்கள் தங்களின் தோற்றப் பொலிவில் இருந்து மாறுபட்டு காட்சி அளிக்கிறார்கள்.

நம் நாட்டைப் பொறுத்தவரை வளரிளம் பெண்கள் அதிக அளவில் சத்துக் குறைபாட்டுக்கு ஆளாகிறார்கள். இரும்பு மற்றும் கால்சியம் சத்துக் குறைபாடு இவர்களிடம் அதிக அளவில் காணப்படுகிறது.

பெண்கள் ஒவ்வொரு வயதையும் எட்டும் போதும் அவர்களின் வயதுக்கேற்ப உடலில் மாற்றங்கள் ஏற்படுகிறது. ஆரோக்கியமும் அழகும் பெற நினைக்கும் பெண்கள் அதற்கேற்ற ஊட்டச்சத்துக்கள் மிகுந்த உணவினை சாப்பிட வேண்டும்.

நம் நாட்டைப் பொறுத்தவரை வளரிளம் பெண்கள் அதிக அளவில் சத்துக் குறைபாட்டுக்கு ஆளாகிறார்கள். இரும்பு மற்றும் கால்சியம் சத்துக் குறைபாடு இவர்களிடம் அதிக அளவில் காணப்படுகிறது. வைட்டமின் ஏ, வைட்டமின் பி என்று கருதப்படும் தியாமின் ஆகியவற்றின் குறைபாடும் ஓரளவிற்கு இருக்கிறது.

வளரிளம் பெண்கள் எடையைக் குறைப்பதை பற்றியே கவலைப்படுவதால் இந்த பிரச்சினை ஏற்படுகிறது. எடையைக் குறைக்க வேண்டிய தேவை ஏற்படுகிறதோ இல்லையோ இவர்கள் அதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள்.

வளரிளம் பெண்கள் சாப்பிட வேண்டிய உணவுகள்

டானிக் மினரல்கள், வைட்டமின்கள், நார்ச்சத்துக்கள் நிறைந்துள்ள காய்கறிகள் சத்தான உணவு என்ற அடிப்படையில் பல பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. கேரட், பீட்ரூட், முள்ளங்கி, வெங்காயம் போன்ற பச்சை இலை காய்கறிகள், கிழங்குகள், தானியங்கள், வெள்ளரி போன்ற நார்ச்சத்துக்கள் நிறைந்த காய்கள், பீன்ஸ், பயறு வகைகள் போன்றவற்றை தினமும் வளரிளம் பெண்கள் சாப்பிட வேண்டும்.

10 முதல் 12 வயதின் முற்பகுதியில் உள்ள வளரிளம் பெண்கள் பச்சை இலைக் காய்கறிகளை 100 கிராம் அளவும், வேரில் விளையும் காய்கள் மற்றும் கிழங்கு வகைகளை 25 கிராமும், நார்ச்சத்து நிறைந்த காய்கள் மற்றும் தானியங்களை 50 கிராமும் என தினசரி 175 கிராம் அளவில் சாப்பிட வேண்டும்.

16 முதல் 18 வயதின் பிற்பகுதியைச் சேர்ந்த வளரிளம் பெண்கள் 275 முதல் 350 கிராம் வரை இந்த உணவு வகைகளை தினமும் சாப்பிட வேண்டும். அதாவது பச்சை இலை காய்கறிகளை 100 முதல் 150 கிராம் வரையிலும், வேரில் விளையும் காய்கள் மற்றும் கிழங்கு வகைகளை 50 முதல் 75 கிராம் வரையிலும், நார்ச்சத்து நிறைந்த காய்கள் மற்றும் தானியங்களை 75 முதல் 100 கிராம் வரையும் தினமும் சாப்பிட வேண்டும்.

காய்கறிகளைப் போன்று பழங்களிலும் தாதுப் பொருட்கள், வைட்டமின்கள், நார்ச்சத்துக்கள் நிறைய உள்ளன. அவற்றையும் அடிக்கடி சாப்பிட வேண்டும். மேற்கண்ட உணவு முறையை வளரிளம் பெண்கள் பின்பற்றினால் அவர்கள் உடல் ஆரோக்கியமாகவும், அழகாகவும் திகழலாம். ■

வாழைப் பழத்தின் மகத்துவம்!

வருடம் முழுவதும் எல்லா இடங்களிலும் கிடைக்கக் கூடியது வாழைப்பழம். இந்தப் பழம் பல நோய்களைக் குணமாக்கக் கூடிய தன்மையுடையது. இப்பழம் எல்லா தரப்பினராலும் எளிதாக வாங்கக் கூடியதாகவும் மற்றும் அனைத்து இடங்களிலும் அதிக அளவில் கிடைக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

அனைத்து வகை வாழைப்பழங்களும் ஏதோ ஒரு வகையில் பலனளிக்கக் கூடியவையாக உள்ளன. இப்பழம் நமது உடலுக்கு போது மான சக்தியினை அளிக்கிறது. இதில் அதிக நார்ச்சத்து மற்றும் சுக்ரோஸ், ப்ரக்டோஸ், குளுக்கோஸ் போன்ற இயற்கை சர்க்கரைப் பொருட்கள் உள்ளது.

வாழைப்பழத்தில் ஒரு வகை புரதச் சத்து உள்ளது. நம் உடல் இந்த புரதத்தை செரடோனன் எனும் வேதிப்பொருளாக மாற்றுகிறது. இப்பொருள் மனதைத் தளர்வாகவும், மகிழ்ச்சியாகவும் வைத்துக் கொள்ள உதவுகிறது.

வாழைப்பழத்தில் உள்ள வைட்டமின் பி6 இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை சரிபடுத்துகிறது. இந்தப் பழத்தில் அதிக அளவு இரும்புச் சத்து உள்ளதால், இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபினின் உற்பத்தியை அதிகரிக்கிறது. இதானல் இரத்த சோகை நோய் ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது. அதிக அளவு பொட்டாசியமும் குறைந்த அளவு உப்பும் உள்ளதால் இரத்த அழுத்தத்தை குறைப்பதில் வாழைப்பழம் முக்கிய பங்கு வகிக்கிறது.

மேலும் நெஞ்செரிச்சல், அல்சர் போன்ற நோய்களில் இருந்தும் வாழைப்பழம் நிவாரணம் அளிக்கிறது. இந்தப் பழத்தை தினமும் தவறாது சாப்பிட்டு வந்தால் பக்கவாதம் ஏற்படும் ஆபத்து 40 சதவிகிதம் தவிர்க்கப்படுகிறது.

வளரிளம் பெண்களும், குழந்தைகளும் அவசியம் வாழைப்பழத்தை தினசரி சாப்பிடுவது அவர்களின் உடல் நலத்தினை மேலும் சிறப்பாக வைத்திருக்கும். எனவே தினசரி வாழைப்பழத்தை சாப்பிடுங்கள். உடல் நலத்தைக் காத்திடுங்கள். ■

கன்று வளர்ப்பில் கவனம் தேவை!

டாக்டர் பி. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சென்ற இதழ்களில் கறவை மாடுகளின் தொழுவம் அமைக்கும் முறை மற்றும் அத்தொழுவத்தை சுகாதாரமான முறையில் பாரமரிப்பது எப்படி என்பதைப் பற்றியும் தெரிந்த கொண்டோம். ‘இன்றைய கன்றே நாளைய பசு’ என்பதால் கன்று பிறந்த நாளிலிருந்தே கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

1. கன்று பிறந்தவுடன் மூக்கின் வெளிப்புறத்திலும் மெல்லிய ஜவ்வு போன்ற திரவம் மூடியிருக்கும். தாய் பசு அதை நாவினால் சுத்தம் செய்து விடும். அவ்வாறு தாய் பசு செய்யவில்லை எனில் துணி (அ) வைக்கோல் கொண்டு கன்றின் உடலை சுத்தம் செய்யவதோடு, கன்றை நன்கு உலர வைக்க வேண்டும். இதனால் கன்றுக்கு மூச்சுத் திணறல் ஏற்படுவது தவிர்க்கப்படும்.
2. பிறந்த கன்றின் தொப்புள் கொடியை உடனே நீக்க வேண்டும். தொப்புள் கொடியை சுமார் 2 முதல் 3 செ.மீ. நீளத்திற்கு விட்டு, ஒரு சுத்தமான நூலினால் இறுகக் கட்டிவிட வேண்டும். பின்னர் நூலால் கட்டப்பட்ட பகுதிக்கு கீழ் 1 செ.மீ. விட்டு சுத்தமான கத்தரிக்கோல் கொண்டு கத்தரித்து விட வேண்டும். கத்தரித்த இடத்தில் டிஞ்சர் அயோடின் மருந்தைத் தடவ வேண்டும். இதனால் தொப்புளில் புண் ஏற்படுவது தடுக்கப்படும்.
3. பிறந்த கன்றுக்கு சீம்பால் கிடைக்கச் செய்ய வேண்டும். பொதுவாக 4 நாட்கள் வரையில் பசுக்களிடம் சீம்பால் சுரக்கும். சீம்பாலில் சாதாரண பாலை விட ஏழு மடங்கு புரதச் சத்தும், இரண்டு மடங்கு மொத்த திடப் பொருட்களும் உள்ளன. மேலும் அதில் அதிக நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளது. எனவே கன்று பிறந்தவுடன் 10 முதல் 15 நிமிடத்திற்குள் முதல் கட்ட சீம்பாலும், அடுத்த 10 முதல் 12 மணி நேரத்திற்குள் இரண்டாவது கட்ட சீம்பாலும் கொடுப்பது கன்றுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்குவதோடு, கன்றின் திடகாத்திரமான வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும்.

கன்று ஈன்ற மாடு இறந்து விட்டாலோ அல்லது சீம்பால் போதுமான அளவு கிடைக்கவில்லை என்றலோ என்ன செய்வது? என்பதையும், கன்று பராமரிப்பு குறித்த இதர விவரங்களையும் அடுத்த இதழில் பார்ப்போம்... ■

சிறுகதை

புத்தியே பலம்

> **மணியின் நண்பர்களுக்கு அப்போதுதான் விஷயமே புரிந்தது. இவ்வளவு நேரம் நாம் இழுத்தது இளங்கோவின் வண்டியை என்று. 'மூளை பலம் என்பது இதுதான்' என்று சொல்லிவிட்டு தனது வண்டியை இழுத்துக் கொண்டு சென்றான் மணி. அதைப் பார்த்து மணியின் நண்பர்கள் திகைத்து நின்றனர்.**

ஒரு ஊரில் மணி என்ற இளைஞன் இருந்தான். அவனுக்கு உடல் வலிமை இல்லாததால் கடின மான வேலைகள் எதுவும் செய்ய முடியாது. அவனுக்கு மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்கள் மிகவும் பலசாலிகள். மூளை வலிமையை விட உடல் வலிமை யால் உலகத்தில் நிறைய சாதிக்க முடியும் என்று மணியிடம் சொல்லி சிரிப்பர் அவனது நண்பர்கள்.

ஒருநாள் மணி தனது கடைக்குத் தேவையான பொருட்களை சந்தைக்குச் சென்று வாங்கி மூட்டை மூட்டையாகக் கட்டி சிறு வண்டியில் வைத்து மிகவும் சிரமத்துடன் இழுத்து வந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு பெரிய மேடு குறுக்கிட்டது. அவன் உடலில் பலம் இல்லாததால் அந்த மேட்டின் மேல் சரக்கு வண்டியை இழுக்க முடியாமல் மிகவும் திணறினான். வண்டியை நிறுத்தி விட்டு யாராவது உதவிக்கு வருகிறார்களா என்று மேட்டின் மீது ஏறி நின்று பார்த்தான்.

எதிர் திசையில் இருந்து அவனது மூன்று நண்பர்கள் வந்து கொண்டிருந்தனர். அவர் களைப் பார்த்தவுடன் மணிக்கு ஒரு யோசனை தோன்றியது. மேட்டிலிருந்து இறங்கி தன்னிடம் இருந்த கயிற்றின் ஒரு முனையை வண்டியில் கட்டினான். கயிற்றின் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு மறுபடியும் மேட்டிற்கு ஓடி வந்தான். அதற்குள் நண்பர்கள் அவனை நெருங்கி விட்டனர். உடனே மணி கயிற்றின் முனையைப் பிடித்தபடியே அவர்களைப் பார்த்து, 'எனதருமை நண்பர்களே! உங்களுக் கும் எனக்கும் ஒரு போட்டி' என்றான். 'என்ன போட்டி?' என்றனர் மணியின் நண்பர்கள். 'உங்களுக்கும் எனக்கும் கயிறு இழுக்கும் போட்டி. நீங்கள் மூன்று பேரும் இந்த முனையைப் பிடித்துக் கொண்டு இழுங்கள், நான் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறேன். யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்ப்போம்!' என்றான் மணி.

அதைக் கேட்ட மூன்று நண்பர்களும் பலமாக சிரித்தனர். அதைக் கண்ட மணி 'ஆளைப் பார்த்து எடை போடாமல் போட்டிக்கு வாருங்கள்' என்று சவால் விட்டான். உடனே மூன்று நண்பர்களும் வேண்டா வெறுப்பாக போட்டிக்கு சம்மதித்தனர். மணிதான் கயிறு இழுப்பதாக நினைத்துக் கொண்டு, மிகச் சாதாரணமாக கயிற்றினை இழுத்தனர்.

அவர்கள் நினைத்தது போல் அது அவ்வளவு சாதாரணமாக இழுபடவில்லை. திடீரென்று 'மணிக்கு பலம் இருக்கிறதோ?' என்ற சந்தேகம் அவர்களுக்கு உண்டாயிற்று. ஆகவே கயிற்றை இறுக்கமாகப் பிடித்து இழுத்தனர். ஆனால் இழுப்பது மிகவும் கடினமாக இருந்தது. மணியிடம் தோற்றுப் போனால் அவமானம் என்று நினைத்த அவர்கள், தங்கள் பலம் கொண்ட மட்டும் கயிறை இழுத்தனர். எதிர்ப்பக்கமிருந்த மணி, தான் இழுப்பதை மெல்ல மெல்ல விட்டுக் கொண்டே இருந்தான்.

வண்டி இப்போது மெல்ல மேட்டில் ஏறத் துவங்கியது. கடைசி நேர இழுவையில் சரக்கு வண்டி மேலே ஏறிவிட்டது. அதைப் பார்த்துக் கொண்டு சிரித்தபடி வந்தான் இளங்கோ, நண்பர்களுக்கு அப்போதுதான் விஷயமே புரிந்தது. இவ்வளவு நேரம் நாம் இழுத்தது இளங்கோவின் வண்டியை என்று. 'மூளை பலம் என்பது இதுதான்' என்று சொல்லிவிட்டு தனது வண்டியை இழுத்துக் கொண்டு சென்றான் மணி. ■

செல்வி. ஆர். மதுமிதா, இ.ஆர், நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

கதம்பம் · உணவு

நலம் தரும் உணவுகள்

இயற்கை நமக்கு பல்வேறு பொருட்களை தந்துள்ளது. காய்கனிகளிலும், கீரைகளிலும் உடல் நலத்தைத் தரும் சத்துக்கள் அடங்கியுள்ளன. அவற்றை அன்றாடம் சாப்பிடுவது ஆரோக்கியமான வாழ்விற்கு வழி வகுக்கும்.

வெள்ளைப்பூண்டு

உடல் ஆரோக்கியத்தைக் காப்பதில் வெள்ளைப் பூண்டு சிறந்த உணவாகும். இது ரத்தத்தில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை அகற்றி, ரத்தத்திற்குப் புத்துணர்ச்சி அளிக்கிறது. இறந்து போன செல்களை நீக்குவதோடு, புதிய செல்களை ரத்தத்தில் விரைந்து உற்பத்தி செய்கிறது. எனவே வெள்ளைப் பூண்டினை அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று உணவியல் நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

வெந்தயக் கீரை

வயிற்று வலி, குடல் புண், வயிற்றுக் கடுப்பு போன்றவைகளை வெந்தயக் கீரை குணமாக்கும். இதில் வைட்டமின் ஏ அதிக அளவில் உள்ளதால் கண்பார்வைக் கோளாறை நீக்கும். இரும்புச் சத்தும், சுண்ணாம்புச் சத்தும் இருப்பதால் வளரும் குழந்தைகளுக்கு அவசியம் சாப்பிட தரலாம். வெள்ளைப்படுதல், நீரிழிவு போன்றவற்றை குறைக்கும் தன்மை இக்கீரைக்கு உண்டு.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கிராமப்புற வியாபார சரக்கு கிடங்கு (Rural Godown) (கட்டுதல், பராமரித்தல், உபயோகித்தல்)

கிராமப்புற நபார்டு வங்கி, 50%க்கான மானியத்தை முன்கூட்டியே வழங்கும். அதை வங்கிகள் கடனாளியின் மானிய காப்பு நிதி கணக்கில் (Subsidy Reserve Fund) வைக்கும். நபார்டு வங்கி, திட்ட அறிக்கை மற்றும் மானியம் கோரும் படிவங்களைப் பெற்று ஆராய்ந்து, இந்த மானிய முன் பணத்தை வழங்கும்.

இறுதி மானியம் (Final Subsidy)

மீதமுள்ள மானியத்தை கிடங்கு கட்டி முடித்தவுடன், கூட்டு ஆய்வு குழு ஆய்வு அறிக்கையின்படி நபார்டு வங்கி வழங்கும். இந்த கூட்டு குழுவில், நபார்ட் வங்கி, கடன் கொடுக்கும் வங்கி, மாநில ஆய்வு மற்றும் சந்தைப்படுத்துதல் இயக்க (Directorate of Marketing and Inspection) அதிகாரிகள் இடம் பெறுவர்.

கிராமப்புற கிடங்கு கட்டி முடிக்க கால அவகாசம்

முதல் தவணை கடன் தொகை வாங்கிய நாளிலிருந்து 15 மாதங்களுக்குள் கிடங்கை கட்டி முடிக்க வேண்டும். கால தாமதத்திற்கு, தக்க ஆதாரங்கள் கொடுத்தால், மேலும் 6 மாத கால அவகாசம் வழங்கப்படும். தயவு காலத்திற்குள் (Grace Period) கிராமப்புற கிடங்கு கட்டி முடிக்கவில்லை என்றால், மானியம் கிடைக்காது. மற்றும் முன்கூட்டி வழங்கப்பட்ட மானியம் திரும்ப பெறப்படும். 7 முதல் 9 ஆண்டுகள் வரை மாத தவணை முறையில் திரும்ப செலுத்த கடன் வழங்கப்படும்.

வட்டி விகிதம்

1. கிராமப்புற கிடங்கு கடன்கள், உள்கட்டமைப்பு (Infrastructure) திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.
2. கலந்து கொள்ளும் வங்கி, நபார்டு, அரசுத் துறை ஆகியவை அந்தந்த நிறுவனத்தின் செயல் பாடுகளின்படி, திட்ட மதிப்பீடு செய்து கொள்ளும்.
3. கூட்டுஆய்வுக்குழு, கடனுக்குமுந்தைய ஆய்வு, இடையில் திட்ட வளர்ச்சி ஆய்வு மற்றும் திட்டம் முடிவுற்ற உடன் செய்யப்படும் ஆய்வு ஆகியவற்றை, எப்பொழுது செய்ய வேண்டுமென்று முடிவு செய்து, அதன்படி ஆய்வுகளை மேற்கொள்ளும்.
4. கிடங்கு கட்டி முடிக்கப்பட்டவுடன், நபார்ட் போன்ற நிறுவனத்தின் மூலமாக, விளைபொருள் சரக்கு காப்பக வளர்ச்சி முறைப்படுத்தும் நிறுவனத்தில் (Ware Housing Development Regulatory Authority) பதிவு செய்ய வேண்டும்.
5. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட பிறகே, கிடங்கிற்குள் உள்ள இடங்களை, வாடகைக்கு விடலாம்.
6. வாடகை மூலம் ஈட்டப்படும் வருவாயில், கடனை திரும்ப செலுத்த வேண்டும்.
7. இந்தத் திட்டத்தை மாற்றியமைக்கவும், மானியத்தைக் கூட்டவும் / குறைக்கவும் அரசுக்கு உரிமை உள்ளது.

கிடங்கு ரசீதின் மேல் வழங்கப்படும் அடமான கடன்

1. கிராமப்புற கிடங்கின் உரிமையாளர் / நிறுவனம், விவசாய பொருட்களை பாதுகாத்து வைக்க பெற்றுக் கொண்டதற்காக, விவசாய பொருள், அளவு, அதன் மதிப்பு அடங்கிய இரசீதை விவசாயிகளுக்கு வழங்கும்.
2. விவசாயிகள், அந்த ரசீதின் மேல் வங்கிகளில் அடமான கடன்கள் பெற முடியும்.
3. இம்மாதிரியான அடமான கடன்கள், அதிகபட்சமாக 12 மாதங்களுக்குக் கொடுக்கப்படும்.
4. இதற்குண்டான வட்டி விகிதம் வழிகாட்டுதல்படி இருக்கும்.

விவசாய தொழில் முனைவோர் மற்றும் விவசாயப் பெருங்குடிமக்கள் மேற்கூறிய நலத் திட்டங்களைப் பயன்படுத்தி, பல்வேறு உதவிகள் பெற்று வாழ்வில் வளம் பெற வேண்டுகிறோம். ■

(முற்றும்)

வளமாக்கும் வங்கி சேவைகள் சிறப்பு பார்வை

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

உடல் நலம்

> இந்த நோய் ஆண்களை விட பெண்களையே குறிப்பாக வளரிளம் பெண்களையே பெருமளவில் தாக்கும் நோயாக உள்ளது.

பெண்களைத் தாக்கும் இரத்த சோகை

நமது உடலில் ஓடும் இரத்தத்தில் உள்ள சிகப்பு அணுக்களில் ஹீமோகுளோபின் எனும் புரதச்சத்து உள்ளது. இதுதான் நமக்குத் தேவையான ஆக்ஸிஜனை உடலிலுள்ள அனைத்து பாகங்களுக்கும் கொண்டு செல்கிறது. இந்த ஹீமோகுளோபின் அளவு குறையும் போது இரத்த சோகை நோய் ஏற்படுகிறது.

இன்றைய இயந்திரமய உலகில் நாம் உண்ணும் உணவு நமக்கு உடல் நலத்தைத் தருவது மிகவும் குறைவேயாகும். இரசாயனங்கள் சேர்க்கப்பட்ட உணவு வகைகள் நமக்கு உடல் நலத்தைத் தருவதை விட விதவிதமான உபாதைகளை உருவாக்கி வருவதாக பல்வேறு ஆய்வுகள் வாயிலாக தெரிய வருகின்றது.

சத்துக் குறைவால் ஏற்படும் பல்வேறு நோய்களில் இரத்த சோகை நோயும் ஒன்றாகும். இந்த நோய் ஆண்களை விட பெண்களையே குறிப்பாக வளரிளம் பெண்களையே பெருமளவில் தாக்கும் நோயாக உள்ளது.

இரத்த சோகை நோய் வருவதற்கான காரணங்கள்

சத்து குறைவான உணவினால், இரத்தச்சத்து மற்றும் ஃபோலிக் ஆசிட் எனும் சத்து நமது உணவில் குறைதல்; புற்றுநோய்களுக்கு தரப்படுகின்ற கீமோதெரப்பி, ரேடியம் தெரப்பி எனப்படும் மருத்துவ சிகிச்சை; நம் குடலில் உண்டாகும் குடல் புழுக்கள்; நமது உடலில் ஏற்படும் பல்வேறு வியாதிகள்; மூளையில் ஏற்படும் புற்றுநோய் கட்டியால் ஏற்படும் இரத்தக் கசிவுகள்; மூக்கில் இரத்தம் வருதல்; வாய் மற்றும் தொண்டைப்புண்களில் இருந்து இரத்தக் கசிவு ஏற்படுதல் போன்றவற்றால் இரத்த சோகை நோய் ஏற்படுகிறது.

மேலும் சுவாசப்பையில் நுரையீரல் புற்றுநோய் மற்றும் காசநோய்; இரைப்பையில் ஏற்படும் புண்களில் இருந்து இரத்த கசிவு ஏற்படுதல்; மஞ்சள் காமாலை, மலேரியா மற்றும் டைபாய்டு போன்ற காய்ச்சல்களால் கல்லீரல் மற்றும் கணையம் போன்றவைகளில் வீக்கம் ஏற்பட்டு இரத்த வாந்தி வருதல்; குடல் புண்களால் குடல் இரத்தத்தை உறிஞ்சக் கூடிய தன்மையை இழப்பது; கர்ப்பிணிப் பெண்கள் பேறு காலத்திலும், குழந்தைகளுக்கு பாலூட்டும் காலத்திலும் சத்தான உணவை சாப்பிடாமல் இருத்தல் போன்ற காரணங்களினால் இரத்த சோகை நோய் ஏற்படுகிறது.

> இரசாயனங்கள் சேர்க்கப்பட்ட உணவு வகைகளை சாப்பிடுவதால், நமது உடல் நலம் பாதிக்கப்பட்டு, பல்வேறு நோய்களின் தாக்குதலுக்கு ஆளாகி மிகவும் சிரமப்படுகிறோம்.

இரத்த சோகை நோயின் அறிகுறிகள் யாவை?

மயக்கம், கிறுகிறுப்பு, உடல் சோர்வு, தோல் மற்றும் நகங்கள் வெளுத்து விடுவது, முகம், கை, கால் போன்றவை வீங்கி விடுவது, மூச்சு விடுவதில் சிரமம் போன்றவை இரத்த சோகை நோயின் அறிகுறிகளாகும்.

இரத்த சோகையை கண்டறிவது எப்படி?

மேற்கூறிய அறிகுறிகள் எதுவாக இருந்தாலும் உடனடியாக மருத்துவரை அணுகி ஆலோசனை பெற்று, இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு எவ்வளவு உள்ளது என்பதை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

சிகிச்சை முறைகள்

மருத்துவரின் ஆலோசனையைப் பெற்று குடல் புழுக்களை அழிக்கும் மருந்துகளை சாப்பிட வேண்டும். இரத்த சோகை அதிகம் இருப்பின் அதற்கும் மருத்துவரின் ஆலோசனை பெற்று தக்க மருந்துகளை சாப்பிட வேண்டும். உணவு உண்ணும் முன்பும், கழிவறை சென்று வந்த பின்பும் கைகளை நன்கு கழுவ வேண்டும். இதனால் குடலில் புழுக்கள் தோன்றுவதை தடுக்கலாம்.

தினமும் இரத்தச் சத்து அதிகமுள்ள உணவு வகைகள், பழங்கள், பேரீச்சம் பழம், பச்சைக் காய்கறிகள், பசுமை யான கீரைகள், தானிய வகைகள், உலர்ந்த பழங்கள் மற்றும் கொட்டை வகைகள், நாட்டு வெல்லம், மாமிச வகைகள், ஈரல், முட்டை, பால் ஆகியவைகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். நோய் வந்ததும் மருத்துவ சிகிச்சை மேற்கொள்வதை விட வருமுன் காப்பதே சிறந்தது என்பதை உணர்ந்து அதற்கேற்ப செயல்படுவோம். ■

பிரதமர் மக்கள் நிதி திட்டம்

முற்றக் கச்சேரி (பகுதி-19)

சுய உதவிக் குழுவின் ஊக்குனர் சுபா, உறுப்பினர்கள் வேணி, செல்லாயி மற்றும் பார்வதி ஆகியோர் பிரதமர் மக்கள் நிதித் திட்டம் குறித்து விவாதிக்கின்றனர்.

வேணி: அனைவருக்கும் வங்கிக் கணக்கு துவக்கப்படும் என்று சொல்கிறார்களே அதைப்பத்தி கொஞ்சம் சொல்லு சுபா.

சுபா: பிரதம மந்திரியின் 'பிரதமர் மக்கள் நிதித் திட்டம்' ஒரு முழுமையான நிதி உள்ளாக்கத்தை நிறைவேற்றக் கூடிய திட்டமாகும். இந்தத் திட்டத்தை 15.08.2014 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் தமது முதல் சுதந்திர தின உரையில் அறிவித்தார்கள்.

செல்லாயி: அப்படியா? எப்ப இருந்து இந்தத் திட்டம் செயல்படுது?

சுபா: 15.08.2014 முதல் 14.08.2015 வரை முதல்கட்டமாகவும், 15.08.2015 முதல்14.08.2018 வரை இரண்டாம் கட்டமாகவும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பார்வதி: முதல் கட்டத்துல என்னென்ன செய்யப் போறாங்க?

சுபா: வங்கி சேவைகளுக்கான உலகளாவிய அணுகு முறையை ஏற்படுத்துவது, வங்கி சேவையில் விடுபட்ட 7.5 கோடி குடும்பங்களுக்கு வங்கிக் கணக்கு துவக்குதல், அவர்களுக்கு 6 மாதத்திற்குள் ரூ. 5000/–த்திற்கு மேல் வரைப்பற்று (Over Draft) வழங்குதல், ரூபே கடன் அட்டை வழங்குதல், ரூ. 1,00,000/–த்திற்கான விபத்துக் காப்பீடு, ரூ. 30,000/–க்கு ஆயுள் காப்பீடு, ரூபே விவசாய அட்டை வழங்குதல் மற்றும் நிதி கல்வி வழங்குதல் போன்றவை முதல் கட்டமாக செயல்படுத்தப்படுது.

செல்லாயி: இரண்டாம் கட்டமாக என்னென்ன செயல் படுத்தப்படுகிறது?

சுபா: மேல்வரைப்பற்றை (Over Draft) வங்கிக்குத் திரும்பச் செலுத்தத் தவறினால் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட கடன் உத்திரவாத நிதி திட்டத்தை உருவாக்குதல், நுண்காப்பீடு அளித்தல், ஒருமுகப்படுத்தப்படாத துறையில் வேலையில் உள்ளவர்களுக்கு ஸ்வலாம்பன் போன்ற ஓய்வு ஊதியத் திட்டத்தை உருவாக்குதல்

செல்லாயி: இந்தத் திட்டம் அவசியம் தேவையா?

சுபா: அரசின் நலத்திட்டங்கள் முழுமையாக ஏழை மக்களுக்கு சென்றடையவும், கந்து வட்டிக்காரர்களிடமிருந்து ஏழை மக்களை காப்பாற்றவும் வங்கிக் கணக்குகள் அவசியம் தேவை.

செல்லாயி: எல்லோருக்கும் வங்கிக் கணக்கு துவங்கணும்னா அதற்கு நிறைய வங்கிகள் துவங்க வேண்டும் தானே?

சுபா: ஆமாம். சுமார் 7.50 கோடி வங்கிக் கணக்குகள் துவக்கப்பட உள்ளதால் வங்கி சேவை அதிகரிக்கும். அதனால் 7000 வங்கிக் கிளைகள், 50,000 வங்கி வணிக சேவையாளர்கள் (BC) மற்றும் 20,000 தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் (ATM) அமைக்கப்பட உள்ளன.

செல்லாயி: இந்தத் திட்டத்துல மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஏதாவது பயன் உண்டா?

சுபா: நல்ல கேள்வி செல்லாயி, +2 அல்லது அதற்கு மேல படித்துள்ள சுய உதவிக் குழு மகளிர்கள் வங்கி வணிக சேவை (BC) பணியில் சேரலாம். இந்த பணியில் சேர்வதால மாதந்தோறும் ரூ. 5000/–க்கும் மேல் வருவாயும் கிடைக்கும். மேலும் வங்கியில் சேமிப்புக் கணக்கு இல்லாத மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் அனைவருக்கும் வங்கி சேமிப்புக் கணக்கு துவக்குவதன் மூலம், வங்கிகள் வழங்கும் பயன்களை அனைவரும் பெறலாம்.

செல்லாயி: நமக்கு ரொம்ப உதவியாக இந்தத் திட்டம் இருக்கும் தானே?

சுபா: வங்கிக் கணக்கு முக்கியம் என்பதாலதான், நம்ம தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தோட மேலாண்மை இயக்குநர் அவர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் வங்கிக் கணக்கு துவக்கி இருக்க வேண்டும் எனவும், வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு 'பிரதமர் மக்கள் நிதி திட்டத்தின்' வங்கிக் கணக்கு துவக்க நடவடிக்கை எடுக்கும்படியும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார்கள்.

செல்லாயி: அப்படியா! வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு உடனே வங்கிக் கணக்கு துவங்கச் சொல்லப் போகிறோம்.

சுபா: ரொம்ப சந்தோஷம். அடுத்த முறை நாம சந்திக்கும் போது நீங்க எல்லோரும் வங்கிக் கணக்கு துவங்கியிருக்கணும். சரியா? நான் போய்ட்டு வரேன். ■

(தொடரும்)

படக் கதை

மணியக்கா...

மணியக்கா, நாங்க எல்லோரும் வங்கிக் கணக்கும் துவங்கிட்டோம். காப்பீடுச் செஞ்சிட்டோம். அடுத்தது என்ன செய்யறது?
ரொம்ப சந்தோசம். வங்கிக் கணக்குல இனிமேல் உங்ககிட்ட அதிகமாக இருக்கிற பணத்தை சேமிச்சிட்டு வாங்க. அதேபோல இனி மதிப்புள்ள எந்த பொருளை வாங்கினாலும் அதற்கும் காப்பீடு செஞ்சிடுங்க...சரியா?
அதற்கு முன்னாடி வங்கியில கணக்கு தொடங்கியவங்களுக்கு என்னென்ன பயன் கிடைக்குதுங்கிறதை இந்தப் போஸ்டரை பாத்து தெரிஞ்சிக்குங்க.
வங்கிக் கணக்கு தொடங்கினால்...
வீடு / நிலம் வாங்கக் கடன்
நகைக் கடன்
வாகனம் வாங்கக் கடன்
அடமானக் கடன்
தொழில் தொடங்கக் கடன்
விபத்து காப்பீடு
கல்விக் கடன்
போன்ற பல்வேறு வசதிகள்
இவ்வளவு பயன் இருக்குதுன்னு இப்பதான் எங்களுக்குத் தெரியும்?
ரொம்ப நல்லது. மாடு வாங்கின உடனேயே இன்சூரன்ஸ் பண்ணுங்க. அதேபோல வங்கியில வாங்கிய கடனையும் திருப்பி செலுத்தினா வங்கி நமக்கு மறுகடன் கொடுப்பதோடல்லாம மற்றவங்களுக்கும் குறைந்த வட்டியில் கடன் உதவி செய்வாங்க.
வங்கிகள் நம்மகிட்ட இருந்து வாங்கும் பணத்தை பல நல்லதுக்கு கடனாக தருது. எனவே நாங்க வங்கியில் வாங்கியக் கடனைக் கண்டிப்பாக முறையாக திரும்பக் கட்டிடுவோம். நாங்க மட்டும் கட்டாம மற்றவங்களையும் கட்டச் சொல்லிடறோம். அப்புறம்...குழு சார்பாக வங்கியில் கடன் பெற்று மாடுகள் வாங்கி வளர்த்து, பால் வியாபாரம் செய்யலாம் என்று நினைக்கிறோம்.
கண்டிப்பா வங்கிக் கடனை முறையா திருப்பிக் கட்டுவோம். நாங்க வாங்குற மாடுகளுக்கும் உடனே காப்பீடு செய்யப் போறோம்.


மாட்டுக்கெல்லாம் காப்பீடு செய்யறது வீண் செலவு தானே?
நல்லா சொன்னீங்க, இன்சூரன்ஸ் மாட்டுக்கு மட்டும்தானா?
அப்படி இல்ல. இன்சூரன்ஸ் என்பது காப்பீடு. மாட்டுக்கு திடீர்னு ஏதாவது ஆகி இறந்துடுச்சுன்னா உங்களால வங்கிக் கடனைக் கட்ட முடியாது. அதனால்தான் இன்சூரன்ஸ் பண்ணினால் குறைந்த பிரிமியத்திற்கு முழு பாதுகாப்பு கிடைக்கும். மீண்டும் புது மாடு வாங்கலாம். லோனும் ஒழுங்கா கட்டலாம். இல்லைன்னா ரொம்ப கஷ்டம் தானே?
இல்ல, நமக்கு ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீடு அது தவிர பொருட்கள் இயந்திரங்கள், விவசாய நிலம், இப்படி எதுக்கும் காப்பீடு செய்யலாம். இது செலவு இல்லை. இது நமக்கு பாதுகாப்பு, வேறு மாதிரி சொல்வதாக இருந்தால், இதுவும் ஒரு வகையில் முதலீடே...
நல்லா சொன்னீங்க, உங்கள சந்திச்சதுல ரொம்ப சந்தோசம். நிறைய விசயம் சொன்னீங்க. ஆமாக்கா உங்களுக்கு இதெல்லாம் எப்படி தெரியும்?
இப்ப தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துல, என்னைப் போல நெறைய பெண்களை வங்கி நண்பர்களா பணியாற்ற பயிற்சி கொடுத்து உருவாக்கியிருக்காங்க. வங்கித் தொடர்பாக எந்த உதவி, எவ்வித சந்தேகம் என்றாலும் என்ன கேளுங்க சரியா.
ரொம்ப நன்றி மணியக்கா.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

நேர்காணல்

சேமிப்பு+சிக்கனம்

கடந்த இதழில் பாரதீய மகிளா வங்கியின் தலைவர் திருமதி. உஷா அனந்தசுப்பிரமணியன் அவர்களை நேரில் சந்தித்து, நமது சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த வங்கித் தொடர்பாளர்களான திருமதி. சுமதி, திருமதி. மகேஸ்வரி, திருமதி. உமாதேவி மற்றும் திருமதி. பாலாமணி ஆகியோர் நேர்காணல் செய்தனர். கடந்த முற்றம் இதழில் வெளிவந்த இந்த நேர்காணலின் தொடர்ச்சி...

பாலாமணி: பாரதீய மகிளா வங்கி எங்கெல்லாம் செயல்படுகிறது?

முதல்கட்டமாக நம் நாட்டின் அனைத்து மாநிலங்களின் தலைநகரங்களிலும் துவக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் துவக்கப்படும். தமிழ்நாட்டில் திருச்சி, கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களில் துவக்கப்பட உள்ளது. எங்கெல்லாம் வங்கிக் கிளைகள் இல்லையோ அங்கெல்லாம் கிளைகள் துவக்கப்படும்.

உமாதேவி : சுய உதவிக் குழு மகளிருக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறதா?

சுய உதவிக் குழு மகளிருக்கான திட்டங்களும் இருக்கின்றன. குறைந்த கிளைகள் இருப்பதால் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வங்கி சேவை அளிப்பதில் சிரமம் உள்ளது. அங்கெல்லாம் கூட்டமைப்புகள் வழியாகவும், மைக்ரோ பைனான்ஸ் மூலமாகவோ குழுக்களுக்கு கடன் வழங்க திட்டமிட்டுள்ளோம். நேரடியாகவே மகளிர் திட்ட கூட்டமைப்புகளுக்கு கடன் கொடுத்து அதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிச் சேவை கிடைக்க வாய்ப்புள்ளது.

சுமதி: சுய உதவிக் குழு மகளிருக்கு கடன் வழங்கப்படுமா?

அரசு விதிகளின்படி செயல்படும் கூட்டமைப்புகளுக்கும், குழுக்களுக்கு கடன் கொடுக்கிறோம். ஆனால் என்னுடைய சொந்தக் கருத்து என்னவென்றால், வெறுமன உள்ள குழுக்களுக்கு கடன் கொடுப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. வேலையில் ஈடுபடாமல் கடன் வாங்கி வட்டிக் கட்டுவதால் பொருளாதார வளர்ச்சி இருக்காது. எனவே சுய உதவிக் குழு பெண்கள் கண்டிப்பாக ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டு அதன் மூலம் வருவாய் பெற வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோளாகும்.

மகேஸ்வரி: குறிப்பிட்ட கூட்டமைப்புகளுக்கு மட்டும்தான் கடன் வழங்குவீர்களா?

முறையாக தர மதிப்பீடு செய்யப்பட்டு, சிறப்பாக செயல்படும் கூட்டமைப்புகளுக்கு கண்டிப்பாக கடன் வழங்குவோம். ஏனென்றால் கூட்டமைப்பு என்பது உடனடியாக உருவானது இல்லை. அதன் செயல்பாட்டின் அடிப்படையில் அதற்கு கடன் வழங்கப்படும். பெற்றக் கடனை திருப்பிச் செலுத்துவதையும் மதிப்பீடு செய்யப்படும். கூட்டமைப்புகளுக்கு கடன் கொடுக்க வங்கிகள் முன்வர வேண்டும் என்றால் உங்களின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் உங்களுக்கு கடன் தருவதில் எங்களுக்கு எந்தத் தடையும் இல்லை.

பாலாமணி: சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் குழு துவங்கியவுடன் வங்கிக் கடன்கள் வாங்கித் தருவதாக சொல்கிறார்களே?

தொண்டு நிறுவனங்கள் குழுக்கள் அமைப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆனால் நாளடைவில் குழுக்களின் செயல்பாட்டுடன் கைகோர்த்து செயல்படுவதில்லை. குழுக்களுக்கு எப்படி வழிகாட்டுவது, அவர்களின் செயல்பாட்டை ஒருங்கிணைப்பது

சுய உதவிக் குழு பெண்கள் கண்டிப்பாக ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டு அதன் மூலம் வருவாய் பெற வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோளாகும்.

கூட்டமைப்புகளுக்கு கடன் கொடுக்க வங்கிகள் முன்வர வேண்டும் என்றால் உங்களின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருக்க வேண்டும்.

குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லம் போன்றவை அமைக்க கடன் வழங்க ஆலோசிக்கிறோம். மாற்றுத் திறனாளி களுக்கு நிச்சயம் கடன் வழங்கப்படும்.

தொலைநோக்குத் திட்டம் என்னவென்றால், பெண்களின் செயல்பாடுகள் அனைத்தும் பொருளாதார வளர்ச்சியை நோக்கியே இருக்க வேண்டும்.

திருமதி. உஷா அனந்தசுப்பிரமணியன்

போன்ற சமயங்களில் தொண்டு நிறுவனங்கள் குழுக்களுக்கு உதவுவதில்லை.

உமாதேவி: உங்கள் வங்கியில் வயதானவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு கடன் வழங்கப்படுமா?

வயதானவர்கள் என்று யாரை சொல்கிறீர்கள். சிலர் 30 வயதிலேயே வயதானவர்கள் போல் இருக்கிறார்கள். 70 வயதிலும் சிலர் இளமையாக இருக்கிறார்கள். எனவே வயதானவர்களுக்கு என்று எந்தத் திட்டமும் இல்லை. உடல் ஊனமுற்ற மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கையருக்கு கடன் தருவதைப் பற்றி யோசிக்கலாம். குழந்தைகள் காப்பகம், முதியோர் இல்லம் போன்றவை அமைக்கவும் கடன் வழங்க ஆலோசித்து வருகிறோம். குறிப்பாக மாற்றுத் திறனாளிகளுக்கு நிச்சயமாகக் கடன் வழங்கப்படும்.

பாலாமணி: தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் குறித்து உங்களின் கருத்து என்ன?

மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தை பார்த்தாலே அதன் மேன்மை தெரிகிறது. நான் அங்கு போய் இருப்பதால் அதன் செயல்பாடு பற்றியும் எனக்குத் தெரியும். மாநில அரசு மகளிர் மேம்பாட்டிற்கு கைகோர்த்து செயல்படுகிறது. நான் அதன் அலுவலர்களிடம் 'அரசாங்கங்கள் மாறும் போது திட்டங்களும் மாறுமா?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் 'எந்த அரசாங்கம் வந்தாலும் மகளிர் மேம்பாட்டிற்காக சிறப்பாக உதவுகின்றன' என்று பதில் சொன்னார்கள். தமிழ்நாட்டில் மகளிர் மே ம்பாடு, பொருளாதார மேம்பாடு சமூக மேம்பாடு என்பது மிகச்சிறப்பாக இருக்கிறது.

உமாதேவி: பெண்களுக்கான தொலைநோக்குத் திட்டங்கள் உங்கள் வங்கியில் உள்ளதா?

தொலைநோக்குத் திட்டம் என்னவென்றால், பெண்களின் செயல்பாடுகள் அனைத்தும் பொருளாதார வளர்ச்சியை நோக்கியே இருக்க வேண்டும். வங்கி சாதாரணமாக 100 ரூபாய் கொடுத்தால் அதில் எந்த ஈடுபாடும் இருக்காது. தொழிலில் ஈடுபாடுள்ளவர்களுக்கு கடன் வழங்க எங்களுக்கு எந்தவித தயக்கமும் இல்லை. நீங்கள் செய்யும் தொழில் வளர்ச்சி அடைந்து பெரிய அளவில் உங்களுக்கு உதவி தேவைப்படும் போது கண்டிப்பாக செய்வோம். ஆனால் உங்களின் முதலீடும் இருந்தால் தான் உங்களால் ஈடுபாடுடன் செயல்பட முடியும். அப்போது உங்களுக்கு நிச்சயம் கடன் வழங்குவதன் மூலம் உதவுவோம். ■

(சேமிப்பு தொடரும்)

நம் மாவட்டம்

தஞ்சாவூர்

கல்லூரிச் சந்தை

தஞ்சாவூர் மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திடும் கல்லூரிச் சந்தை செப்டம்பர் 17, 18 மற்றும் 19ஆம் தேதிகளில் குந்தவை அரசு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இக்கல்லூரிச் சந்தையினை தஞ்சை மாவட்ட ஆட்சியர் டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட அலுவலர் (பொ) திருமதி. எம். மல்லிகா, உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இக்கல்லூரி சந்தையில் மகளிர் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்டதரமான பல்வேறு பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. ■

திருவள்ளூர்

கல்லூரிச் சந்தை

திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகாலட்சுமி பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திடும் கல்லூரிச் சந்தை செப்டம்பர் 18 மற்றும் 19ஆம் தேதிகளில் நடைபெற்றது. இக்கல்லூரிச் சந்தையினை திருவள்ளூர் மாவட்ட திட்ட இயக்குநர் திரு. வீரணன் அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் திரு. கோ. வீரராகவராவ், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார். இக்கல்லூரி சந்தையில் 36 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தனர்.

மகளிர் திட்டம்

திண்டுக்கல்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு விருது

மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் 15.08.2014 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவின் போது திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள், 2010–11ஆம் ஆண்டிற்கான சிறந்த கூட்டமைப்பாகத் தேர்வு செய்யப்பட்ட திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், பிள்ளையார் நத்தம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான சான்றிதழினை வழங்கினார். இத்தகைய விருதுகள் கூட்டமைப்புகளின் செயல்பாட்டிற்கு மேலும் ஊக்கமளிப்பதாக இருக்கிறது. ■

தேனி

ஓட்டுனர் உரிமம் வழங்குதல்

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் செயல்படுத்தப்படும் இளைஞர் திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு, வேலைவாய்ப்பும் பெற்றுத் தரப்படுகிறது. 13.10.2014 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் திறன் வளர்ப்புப் பயிற்சியின் கீழ் ஓட்டுநர் பயிற்சி பெற்ற 96 இளைஞர்களுக்கு ஓட்டுநர் உரிமங்களை தேனி மாவட்ட ஆட்சியர் டாக்டர். கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தேனி மாவட்ட திட்ட இயக்குநர் திருமதி. ஜா. உஷாதேவி, உதவித் திட்ட அலுவலர்கள் திரு. ராஜகுமார், திரு. செல்வராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

திருநெல்வேலி

கல்லூரிச் சந்தை

திருநெல்வேலி மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் கல்லூரிச் சந்தை திருநெல்வேலி முன்னீர்பள்ளம் ரோஸ்மேரி கல்லூரியில் 08.10.2014 முதல் 10.10.2014 வரை நடைபெற்றது. இக்கல்லூரிச் சந்தையை ரோஸ்மேரி கல்லூரியின் முதல்வர், மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் ஆகியோர் துவக்கி வைத்தனர். தஞ்சை மாவட்டத்தில் செயல்படும் 21 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களை இக்கல்லூரிச் சந்தையில் விற்பனை செய்தனர். மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் தரமாகவும், அழகாகவும், நியாயமான விலையிலும் இருப்பதால் கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் கல்லூரிச் சந்தைக்கு வருகை தந்து தங்களுக்குத் தேவையானப் பொருட்களை வாங்கிச் சென்றனர். ■

நீலகிரி

கல்லூரிச் சந்தை

நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் கல்லூரிச் சந்தை, உதகை JSS பார்மஸி கல்லூரியில் 14.10.2014 முதல் 16.10.2014 வரை நடைபெற்றது. இச்சந்தையினை நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். நீலகிரி, ஈரோடு, நாமக்கல், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுவின் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தனர்.

சேலம்

கல்லூரிச் சந்தை

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை கல்லூரி மாணவ மாணவியரிடையே பிரபலப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் கல்லூரிகளில் கல்லூரிச் சந்தை நடத்தப்படுகிறது. இதன்படி சேலம் மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் அயோத்தியாப்பட்டினம் இராமலிங்கபுரத்தில் உள்ள மகேந்திரா பொறியியல் கல்லூரியில் 15.10.2014 முதல் 17.10.2014 வரை கல்லூரிச் சந்தை நடைபெற்றது. இச்சந்தையில் 20 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு தாங்கள் தயாரித்த பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தனர். கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ–மாணவியர்கள் தங்களுக்குத் தேவையானப் பொருட்களை வாங்கிச் சென்றனர். ■

காஞ்சிபுரம்

மாற்றுத் திறனாளிகளின் தேவைகளைக் கண்டறியும் முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கானத் தேவைகளைக் கண்டறியும் முகாம், 25.09.2014 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் முடிச்சூரில் நடைபெற்றது. இம்முகாமில் 68 மாற்றுத் திறனாளிகள் மற்றும் 27 நலிவுற்றோருக்கான தேவைகள், சிறப்புக் குழுவின் மூலம் கண்டறியப்பட்டது. இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த சிறப்பு கல்வியாளர்கள் (SSA), காது கேட்கும் திறனை பரிசோதனை செய்பவர்கள், முதியோருக்கான தேவையை கண்டறிபவர், முடநீக்கியல் வல்லுநர் (DDWOA), மருத்துவ சமூகப் பணியாளர்கள் இம்முகாமில் பங்கேற்று தேவைகளைக் கண்டறிந்தனர். இம்முகாமில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் செயல் அலுவலர் முனைவர் மனோகர சிங், காஞ்சிபுரம் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி. கிருஷ்ணம்மாள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார திட்ட மேலாளர் திருமதி. கல்யாணி, மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கான ஆலோசகர் திருமதி வை. தீபா ராஜ்கமல், ஊராட்சி தலைவர் திரு. தாமோதரன், செயலாளர் திரு.வாசுதேவன், கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்கள், களப்பணியாளர்கள் கலந்துகொண்டனர். ■

இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த சிறப்பு கல்வி யாளர்கள் (SSA), காது கேட்கும் திறனை பரிசோதனை செய்பவர்கள், முதியோருக்கான தேவையை கண்டறிபவர், முடநீக்கியல் வல்லுநர் (DDWOA), மருத்துவ சமூகப் பணியாளர்கள் இம்முகாமில் பங்கேற்று தேவைகளைக் கண்டறிந்தனர்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்து பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சென்னை தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் உயர் அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் கொண்ட குழுவினருக்கு, வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து இரண்டு நாள் பயிற்சி வேலூர் மாவட்டம், ஏலகிரியில் உள்ள HRDC பயிற்சி மையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியானது இரண்டு கட்டமாக 19.09.2014 – 20.09.2014 மற்றும் 10.10.2014 – 11.10.2014 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

முதல்கட்டமாக 19.09.2014 மற்றும் 20.09.2014 ஆகிய இருதினங்கள் நடைபெற்ற பயிற்சியில் தலைமை அலுவலகத்தை சேர்ந்த உயர் அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் கலந்து கொண்டனர். இக்குழுவினர் மாவட்ட கற்றல் மையம், செம்மகளிர் கூட்டமைப்பு ஆகியவற்றை பார்வையிட்டு அவற்றின் செயல்பாடுகள் பற்றி அறிந்து கொண்டனர்.

இரண்டாவது கட்டமாக 10.10.2014 மற்றும் 11.10.2014 ஆகிய இருதினங்கள் நடைபெற்ற பயிற்சியில் தலைமை அலுவலக உயர் அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த இரண்டு கட்ட பயிற்சியிலும் புதுவாழ்வு திட்ட உதவி மேலாளர் திரு. பழனி அவர்கள், வாழ்வாதார இயக்க செயல்பாடுகளான அடிப்படை புள்ளி விவர சேகரிப்பு, மக்கள் நிலை ஆய்வு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் சமூகத் தணிக்கை குழு செயல்பாடுகள் குறித்து விளக்கமாக எடுத்துக் கூறினார்.

பின்னர் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த உயர் அலுவலர்கள் மாதனூர் ஊராட்சியில் உள்ள மாவட்ட கற்றல் மையம் சென்று பார்வையிட்டனர். அங்கு வேலூர் மாவட்ட வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் (பொ) திரு. ஜெயக்குமார் அவர்களும் மற்றும் கற்றல் மைய உறுப்பினர்களும், கற்றல் மையத்தின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

ஏலகிரியில் உள்ள ஏரியில் படகு குழாமினை குத்தகைக்கு எடுத்து திறம்பட நடத்தி வரும் செம்மகளிர் கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. படகு குழாம் குத்தகையினை மிகுந்த சிரமத்திற்கு இடையே பெற்றதாக கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து ஏலகிரியில் தேன் தயாரிக்கும் ஒத்த தொழில் குழுவின் செயல்பாடுகள் பார்வையிடப்பட்டது. தேனீக்களை வளர்த்து, தேனைச் சேகரித்து, விற்பனை செய்யும் முறை போன்றவை குறித்த பல்வேறு விபரங் களையும் சென்னை தலைமை அலுவலகத்தில் இருந்து சென்ற குழுவினருக்கு தேன் தயாரிக்கும் ஒத்த தொழில் குழுவின் உறுப்பினர்கள் விளக்கிக் கூறினர். ■

கவிதை

கிருஷ்ணகிரி

திட்ட விளக்கக் கூட்டம்

கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் சார்பில் அனைத்து வங்கியாளர்களுக்கான திட்ட விளக்கக் கூட்டம் நடைபெற்றது. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் திரு. டி.பி.ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வாழ்வாதார இயக்க மாவட்ட திட்ட இயக்குநர் திரு. ஜி. ராமையா, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன், முன்னோடி வங்கி மலோளர் திரு. ருத்ரப்பா மற்றும் வங்கி மேலாளர்கள், கூட்டுறவு வங்கி செயலாளர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

திருப்பூர்

சிறந்த வங்கிகளுக்கு விருது

திருப்பூர் மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு அதிக அளவில் கடன் இணைப்பு வழங்கிய வங்கிகளுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்களை 24.09.2014 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திரு. கு. கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில் திருப்பூர் மாவட்ட வாழ்வாதார இயக்கத் தின் இணை இயக்குனர் / திட்ட இயக்குநர் திரு. என். ராஜவேல், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் திரு. ப. திரவியம், முதன்மை வங்கி மேலாளர் திரு. கணேசன், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

சிவகங்கை

கல்லூரிச் சந்தை

சிவகங்கை மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் சிவகங்கை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் கல்லூரிச் சந்தை நடைபெற்றது. உணவு, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அரசு முதன்மைச் செயலர் திருமதி. எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப., சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திரு. வே. இராஜாராமன், இ.ஆ.ப., ஆகியோர் 24.09.2014 அன்று கல்லூரிச் சந்தைக்கு வருகை தந்து அங்கு வைக்கப்பட்டிருந்த சுய உதவிக் குழுக்களின் பொருட்களை பார்வையிட்டதுடன், மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளையும் வழங்கினர். ■

மகளிர் திட்டம் வாழியவே...!

பெண்கள் வாழ்வின் தரம் உயர
மகளிர் திட்டம் வந்ததுவே!
சுய உதவிக் குழுவின்
பெண்களெல்லாம்
சுயமாய் தொழில் தொடங்கிடவே
தொழிற்பயிற்சிகள் பல தந்தே
தொழில் முனைவோராய் மாற்றியதே!
வங்கிக் கடன் வாங்கித் தந்தே
வாழ்வில் வளமை பெருக்கியதே!
சுழல் நிதி மானியம் தருகிறதே
மணிமேகலை விருதும் வழங்கிடுதே!
பொருட்காட்சிகள் பல நடத்தி
பொருட்களை நிதம் விற்க உதவிடுதே!
மகளிர் நலன் மாண்புறவே
நல்ல முற்றம் துணை வருதே!
வறுமை இருட்டு நீக்கிட
வளமை என்றும் வாழ்வில் பெருகிட
மகளிர் நலன் காக்க வந்த
மகளிர் திட்டம் வாழிய வாழியவே!

திருமதி. காந்திமதி ரவிச்சந்திரன்
செல்வ விநாயகர் மகளிர் குழு,
இ.ஆர். நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் சமுதாயப் பயனாளிகள்

தேசியப் பட்டறிவுப் பயணம்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்

திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன், தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

தமிழ்நாட்டில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் செயல்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் அலுவலர்கள், கூட்டு வள மையப் பணியாளர்கள் மற்றும் சமுதாயப் பணியாளிகள் அடங்கிய 30 நபர் குழு 15.09.2014 முதல் 19.09.2014 வரை ராஜஸ்தான் மாநிலம், அபுரோடு மற்றும் பாலி ஆகிய வட்டாரங்களில் செயல்படும் மேற்கு ராஜஸ்தான் வறுமை அகற்றும் திட்டத்தின் (MPOW-ER) செயல்பாடுகளைப் பார்வையிட்டது. இத்திட்டத்தின் கீழ் அங்குள்ள படிப்பறிவற்ற ஏழை கிராம மக்களுக்கு காய்கறி விவசாயம், எருமை மற்றும் ஆடுகள் வளர்ப்பு போன்ற தொழில்களுக்கு புதிய தொழில் நுட்பங்கள் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக

காய்கறி சாகுபடியில்

செயற்கை இழை கூடாரங்கள் (Poly House) அமைத்து காய்கறி நாற்றுகளை கூட்டு உற்பத்தி செய்தல்

சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல்

மண்புழு உரம் தயாரித்தல்

வேளாண்மைத் தோழி (வேளாண் பயிற்சியளிக்கப்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்) மூலம் பயிர் பராமரித்தல்

வயல் வெளிப்பள்ளி அமைத்தல்

பங்கீட்டு முறை நீர் நிர்வாகம்

எருமை மற்றும் ஆடுகள் வளர்ப்பு

எருமை மற்றும் ஆடுகள் தங்குவதற்கு கூடாரம் சுகாதார முறையில் அமைத்தல்

மருத்துவம் மற்றும் உணவு முறைகளை முறையாக நடைமுறைப்படுத்துதல்

பசுத்தோழி (கால்நடை மருத்துவம் மற்றும் வளர்ப்பு முறை பயிற்சி அளிக்கப்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்) மூலம் முறையான கால்நடை பராமரிப்பு

எருமை பாலினை கூட்டுறவு சங்கங்களுக்கு விற்பனை செய்து அதிக விலை பெறுதல்

வளர்ந்த ஆடுகளை எடை போட்டு வியாபாரிகளுக்கு விற்பனை செய்தல்

'மேற்கூறிய செயல்பாடுகளை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பகுதிகளிலும்செயல்படுத்திபயன்பெறுவோம்' என பட்டறிவுப் பயணம் மேற்கொண்ட சமுதாயப் பயனாளிகள் தெரிவித்தனர். ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் அலுவலர்கள், கூட்டு வள மையப் பணியாளர்கள் மற்றும் சமுதாயப் பணியாளிகள் அடங்கிய 30 நபர் குழு 15.09.2014 முதல் 19.09.2014 வரை ராஜஸ்தான் மாநிலம், அபுரோடு மற்றும் பாலி ஆகிய வட்டாரங்களில் செயல்படும் மேற்கு ராஜஸ்தான் வறுமை அகற்றும் திட்டத்தின் (MPOWER) செயல்பாடுகளைப் பார்வையிட்டது.

நாகை மாவட்ட கடலோரப் பகுதி விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட காய்கறி, மூலிகை சாகுபடி மற்றும் விற்பனை புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

நாகப்பட்டினம், கீழையூர், தலைஞாயிறு மற்றும் வேதாரண்யம் ஒன்றியங்களில் அமைந்துள்ள கடலோர தகுந்த விவசாயி களைக் கண்டறிந்து உற்பத்தியாளர் குழு ஒன்றிற்கு 12 முதல் 20 விவசாயிகளை உள்ளடக்கி 40 மூலிகை உற்பத்தியாளர்கள் குழுக்களும், காய்கறி உற்பத்தியாளர் குழுக்களும் உருவாக்கி விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத்திட்டம், பல்வேறு வளர்ச்சி மற்றும் வாழ்வாதாரத் திட்டங்களை செயல்படுத்தி வெற்றி கண்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாக, மதுரை The Covnant Centre for Development (CCD) , உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்ட கடலோர பகுதிகளில் உள்ள மா, காய்கறி மற்றும் மூலிகை சாகுபடியாளர்களை முதன்மை உற்பத்தியாளர் குழுக்களாக ஒருங்கிணைத்து, இக்குழுக்கள் மூலம் காய்கறி, மூலிகை சாகுபடி, அறுவடை, சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம், கீழையூர், தலைஞாயிறு மற்றும் வேதாரண்யம் ஒன்றியங்களில் அமைந்துள்ள கடலோர தகுந்த விவசாயி களைக் கண்டறிந்து உற்பத்தியாளர் குழு ஒன்றிற்கு 12 முதல் 20 விவசாயிகளை உள்ளடக்கி 40 மூலிகை உற்பத்தி யாளர்கள் குழுக்களும், காய்கறி உற்பத்தியாளர் குழுக்களும் உருவாக்கி விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மதுரை CCD செயலாளர் திரு. முத்து வேலாயுதம் ஆகியோரால் இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 24.09.2014 அன்று சென்னையில் கையெழுத்திடப்பட்டது. ■

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை சுயமாக இயங்கும் சமுதாய அமைப்புகளாக மாற்றும் திட்டம்

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் நிதியுதவியுடன் செயல்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தில் 109 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உள்ளன. திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தக் கூட்டமைப்புகளை வலுப்படுத்திட ஏதுவாக 24.09.2014 அன்று திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு சென்னையிலும், 25.09.2014 அன்று விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும், 26.09.2014 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு 27.09.2014 அன்று நாகர்கோவிலிலும் கலந்துரையாடல்கள் மற்றும் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

'இந்தக் கலந்தாய்வுக் கூட்டமானது மிகவும் பயனுள்ளதாகவும், சிறப்பாகவும் அமைந்தது எனவும் கூறியதுடன், வருங்காலங்களில் இத்தகைய கலந்துரையாடல் அடிக்கடி நடத்தப்படல் வேண்டும்' எனவும் கலந்தாய்வுக் கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள் கோரிக்கை வைத்தனர்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு சேவைகள் மூலம் வருமானம் ஈட்டுதல், அலுவலக நிர்வாகம், கணினி மற்றும் இணையதள பயன்பாடு, Tally மென் பொருள் உபயோகித்தல், காப்பீடு திட்டங்கள், துயர் குறைப்பு நிதி, குறுந்தொழில் மேம்பாடு, ஆண்டு வரவு செலவுக் கணக்கு தயாரித்தல், ஆண்டு செயல் திட்டம் தயாரித்தல் பற்றி ஆராயப்பட்டது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதி நிதிகள் எழுப்பிய சந்தேகங்களுக்கு விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

இக்கலந்தாய்வுக் கூட்டங்களில் கலந்து கொண்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள், 'இந்தக் கூட்டமானது மிகவும் பயனுள்ளதாகவும், சிறப்பாகவும் அமைந்தது எனவும் கூறியதுடன், வருங்காலங்களில் இத்தகைய கலந்துரையாடல் அடிக்கடி நடத்தப்படல் வேண்டும்' எனவும் கோரிக்கை வைத்தனர். ■

தொழிலாளியை தொழில் முனைவோராய் மாற்றுவோம்!

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் திருவள்ளூர் மாவட்டம், சிறுளப்பாக்கம் பகுதி வள மையத்திற்குட்பட்ட அவுரிவாக்கம் ஊராட்சியில் வசிக்கும் திருமதி. மேகலா, திருமதி. முருகம்மாள், திருமதி. சந்தியா ஆகியோர் ஒரு கூட்டுப் பொறுப்புக் குழுவாக CLG இணைந்து, நாகாத்தம்மன் மரக்கரி தயாரித்தல் தொழிலை செய்து வருகின்றனர். இத்தொழிலிலுக்கு NABFINS வங்கி மூலம் ரூபாய் 1,63,875/–ம், திட்ட நிதியாக (Patient Capital) ரூபாய் 54,625/–ம், பயனாளிகளின் பங்குத் தொகையாக ரூபாய் 11,500/–ம் சேர்த்து மொத்தம் ரூபாய் 2,30,000/– மதிப்பீட்டில் இத்தொழில் 28.07.2014 அன்று துவங்கப்பட்டது. இதுவரை ரூபாய் 76,000/– இத்தொழில் மூலம் வருமானம் ஈட்டி யுள்ளனர். ரூபாய் 12,611/– கடன் தொகையை வங்கிக்கு திருப்பிச் செலுத்தியுள்ளனர்.

இதற்கு முன் இப்பயனாளிகள் மரக்கரி சூளையில் தொழிலாளிகளாக பணியாற்றி வந்துள்ளனர். அந்த அனுபவத்தின் அடிப்படையில் தற்போது திட்ட உதவியுடன் சொந்தமாக மரக்கரி சூளை துவக்கி தொழில் முனைவோராக மாறியுள்ளனர். இவர்களின் வெற்றி, தொழிலாளர்கள் நிறைந்த இப்பகுதியில் பல சுய தொழில் முனைவோரை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. ■

இந்த கீற்று விற்பனை மூலம் மாதந்தோறும் கணிசமான வருவாய் எங்களுக்கு கிடைக்கிறது. இந்தக் குறுந் தொழிலை துவக்க வைத்து, எங்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இடத்துக்குப் பொருத்தமான தொழில்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் குறுந்தொழில் மேம்பாட்டின் மூலம் கடன் பெற்று, கீற்று முடைதல் தொழிலை சிறப்பாக செய்து வரும் கடலூர் மாவட்டம், செம்மாங்குப்பம், சோனஞ்சாவடி கிராமத்தைச் சேர்ந்த திருமதி. எழிலரசி தன் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார்.

‘எங்கள் பகுதியில் அதிக தென்னை மரங்கள் உள்ளன. சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் கீற்று முடைதல் குறுந்தொழிலுக்கு கடன் தொகை ரூ. 1,69,000/–ம், எங்களுடைய பங்குத் தொகை ரூ. 18,000/–ஐ சேர்த்து மொத்தம் ரூ. 1,87,000/– முதலீட்டில் 30.04.2013ல் கீற்று முடைதல் தொழில் துவங்கி சிறப்பாக நடத்தி வருகிறோம். நாங்கள் முடைகின்ற கீற்றை கடலூர் OT, திருப்பாதிரிப்புலியூர், குறிஞ்சிப்பாடி மற்றும் பரங்கிப்பேட்டை பகுதிகளில் உள்ள கடைகளுக்கு நேரடியாக விற்பனை செய்து வருகிறோம். இந்த கீற்று விற்பனை மூலம் மாதந்தோறும் கணிச மான வருவாய் எங்களுக்கு கிடைக்கிறது.

இதுநாள் வரை ரூ. 2,19,500/– அளவில் கீற்று விற்பனை செய்துள்ளோம். எங்களின் செலவு போக மீதமுள்ள இலாபத்தில் ரூ. 85,000/– வரை கடனை திருப்பி செலுத்தியுள்ளோம். ஒவ்வொரு மாதமும் தவறாமல் கடன் தவணையை செலுத்தி விடுகிறோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ■

சமுதாயப் பயனாளிகள்
பிரதிநிதிகளுக்கு காப்பீட்டுப் பயிற்சி

ஊனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் காப்பீட்டுத் திட்டங்கள் மற்றும் அவற்றால் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கிடைக்கும் வருவாய், காப்பீட்டுத் திட்டங்களின் சமுதாயப் பயன்பாடு ஆகியவை குறித்து இரண்டு நாள் பயிற்சி காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்றது. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மேலாளர் திரு. செந்தில்குமார் இப்பயிற்சியில் கலந்து கொண்டார்.

இப்பயிற்சியில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள், காப்பீட்டுத் தோழிகள், கூட்டு வள மைய கூட்டமைப்பு புத்தகப் பராமரிப்பாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள், செயலாக்குநர்கள் ஆகியோருடன் மாவட்ட செயலாக்க அலுவலகக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர்கள், உதவியாளர்களும் கலந்து கொண்டனர்.

சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் ஒரு சேமிப்பாக காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்பதையும், காப்பீட்டு நிறுவனங்களால் வழங்கப்படும் ஊக்கத் தொகை சமுதாய மக்களுக்கே பயன்பட வேண்டும் என்பதும் எடுத்துரைக்கப்பட்டது.

இரண்டாவது நாள் பயிற்சியில் அனைவரையும் ஊராட்சி வாரியாக, பல குழுக்களாகப் பிரித்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், எவ்வாறு காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துகின்றன என்பது குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு, வணிக ரீதியான வருவாயாக ஊக்கத் தொகை கிடைக்கிறது என்பதை பயிற்சியாளர்கள் அறிந்து கொண்டனர். இத்திட்டத்தினை அனைவருக்கும் முழுமையாகக் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என ஊராட்சி அளவிலான குழு பிரதிநிதிகள் மற்றும் காப்பீட்டுத் தோழிகள் தெரிவித்தனர். ■

சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் ஒரு சேமிப்பாக காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்பதையும், காப்பீட்டு நிறுவனங்களால் வழங்கப்படும் ஊக்கத் தொகை சமுதாய மக்களுக்கே பயன்பட வேண்டும் என்பதும் எடுத்துரைக்கப்பட்டது.

முற்றம்

உங்க ஏரியா...

இரண்டு படங்களுக்கும் உள்ள ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கவும்

சின்னச் சின்ன செய்திகள்

உலக தாய்மார்கள் தினம் உருவாகக் காரணமாக இருந்த பெண்மணி – ஆன் ஜார்விங் ஆவார்.

உலக மக்களால் 'கருப்பு காந்தி' என்று அழைக்கப்பட்டவர் – நெல்சன் மண்டேலா.

ஐக்கிய நாட்டு பொதுச்சபையின் முதல் பெண் தலைவர் – பண்டிட் விஜயலட்சுமி.

இந்தியப் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட முதல் பெண்மணி – கமலாவதி சட்டோபாத்யாயா.

ஞானபீடப் பரிசு பெற்ற முதல் பெண் எழுத்தாளர் – ஆஷா பூர்ணாதேவி

கண்ணகிக்கு கோவில் கட்டிய தமிழ் மன்னர் – சேரன் செங்குட்டுவன்

டெல்லியின் முதல் பெண் முதலமைச்சர் – சுஷ்மா சுவராஜ்

உலகிலே பெண் எழுத்தாளர்கள் அதிகமுள்ள நாடு – ரஷ்யா

இந்தியாவில் முதல் பெண் வக்கீல் – ரெஜினா குப்தா

இந்திய விமானத்தின் பைலட்டாக சேர்ந்த முதல் பெண் – சௌதாமினி தேஷ்முக்

இந்திய நைட்டிங்கேல் என்று அழைக்கப்படுபவர் – சரோஜினி நாயுடு

பிரிட்டனை அதிக ஆண்டுகள் ஆண்ட அரசியார் – விக்டோரியா மகாராணியார்

தொகுப்பு – திருமதி. ப. கலைமதி,
மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

இந்த சந்திப்பின் போது, வன்முறை தடுப்பு மையக் குழு உறுப்பினர்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்கள், பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்த விபரங்களைத் தெரிவித்தனர்.

கூடுதல் திட்ட இயக்குநர் வருகை

விருதுநகர் மாவட்டத்தின் அனைத்து ஒன்றியங்களிலும் புதுவாழ்வு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் உள்ள சாத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட நென்மேனி ஊராட்சிக்கு, புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. ஆர். வி. ஷஜீவனா அவர்கள், பெண்கள் வன்முறை தடுப்பு மையத்தில் உள்ள குழு உறுப்பினர்களை சந்திப்பதற்காக வருகை புரிந்தார்கள்.

இந்த சந்திப்பின் போது, வன்முறை தடுப்பு மையக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் உறுப்பினர்கள், தங்களது ஊராட்சியில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்து பல்வேறு விபரங்களைத் தெரிவித்தனர். இந்த சந்திப்பின் போது, கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள், பெண்கள் வன்முறை தடுப்பு மையக் குழுவினர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை வழங்கினார்கள். விருது நகர் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள், களப்பணியாளர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ■

இயற்கை விவசாய மண் பரிசோதனை முகாம்

தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில், தேனி மாவட்ட புதுவாழ்வு திட்டத்தின் மகளிர் இயற்கை விவசாய மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ஆண்டிபட்டி மற்றும் போடி வட்டாரங்களில் திட்ட ஒருங்கிணைப்பு அணிகள் மூலம் நடைபெற்ற மண் பரிசோதனை முகாமினை தேனி மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. எஸ். கழுகாசலமூர்த்தி அவர்கள் துவக்கி வைத்தார். 15.09.2014 மற்றும் 16.09.2014 ஆகிய நாட்களில் முல்லையம்பட்டி மற்றும் சிலமலை ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற முகாமில் மதுரை வேளாண்மைத் துறை மண் பரிசோதனை வாகனம் மூலம் மண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இம்முகாமில் மூத்த வேளாண்மை அலுவலர் திருமதி. உலகம்மை, வேளாண்மை அலுவலர்கள் திரு ராமசாமி மற்றும் திரு. ரவிக்குமார் ஆகியோர் விவசாயிகளிடம் பல்வேறு வேளாண் தொழில் நுட்பங்களைப் பற்றி தெளிவாக எடுத்துரைத்தனர். மேலும் 226 விவசாயிகளுடைய மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வு முடிவுகள் மற்றும் என்னென்ன பயிர்கள் விளைவிக்கலாம் என்ற பரிந்துரையும் வழங்கப்பட்டது. இம்முகாமிற்கான ஏற்பாடுகளை புதுவாழ்வு திட்ட வேளாண்மை ஆலோசகர், உதவித் திட்ட மேலாளர்கள், மாவட்ட மகமையின் நிர்வாகிகள் செய்திருந்தனர். ■

திருவள்ளூர்

பாரம்பரிய முறையில் இயற்கை விவசாயம்

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியத்திலுள்ள தாமரைக்குப்பம் இருளர் காலனியில் வசிக்கும் 85 இருளர் குடும்பங்கள் இப்பகுதியில் பயன்படாமல் இருந்த 20 ஏக்கர் தரிசு நிலத்தை புதுவாழ்வு திட்டத்தின் உதவியுடன் பெற்று, இந்த நிலத்தில் இயற்கை முறையில் காய்கறி, நெல், கம்பு, கீரை போன்றவற்றை சாகுபடி செய்து வருகின்றனர். இந்த ஒத்த தொழில் குழுவின் விவசாய காய்கறி தோட்டத்தை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் 12.09.2014 அன்று ஆய்வு செய்து, குழு உறுப்பினர்களிடம் கலந்துரையாடினார். இந்த ஆய்வின் போது புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. சிவகாமி ஸ்ரீகிருஷ்ணா, மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு. வீரணன், ஊராட்சித் தலைவர் திரு. செல்லையா மற்றும் திட்டப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

பழங்குடியின மக்கள் சாகுபடி செய்து விளைவித்து வரும் காய்கறிகளை வெளியிடங்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்திட வசதியாக வாகனம் ஒன்றை, மானிய உதவியுடன் வாங்கித் தர விரைவில் நடவடிக்கை மேற்கொள்வதாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறினார்.

கோவை

புதுவாழ்வு திட்ட செயல்பாடுகள் ஆய்வு

கோவை மாவட்ட ஆட்சியர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., அவர்கள் 14.10.2014 அன்று மேற்கு மலைத் தொடர்ச்சி அடிவாரத்தில் உள்ள தாணிகன்டி பழங்குடியின கிராமத்திற்கு வருகை தந்து, அங்கு செயல்படுத்தப்படும் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். அப்பகுதி பழங்குடியின மக்களுடன் கலந்துரையாடி, அவர்களின் தேவைகளை கேட்டறிந்து, அவற்றை நிறைவேற்றித் தருமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் சாடிவயல் மற்றும் சர்க்கார் போரத்தி பழங்குடியின கிராமங்களுக்குச் சென்று அப்பகுதி யில் வசிக்கும் பழங்குடியின விவசாயப் பெண்களிடம் கலந்துரையாடினார்.

இந்த ஆய்வில் கோவை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பிலிப்ஸ் இளையராஜா, பேரூர் வட்டாட்சியர், போளாம்பட்டி வனச்சரகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவித் திட்ட மேலாளர்கள், வேளாண் ஆலோசகர், களப்பணியாளர்கள் மற்றும் நரசிபுரம், இக்கரை போளுவம்பட்டி மற்றும் மத்துவராயபுரம் ஆகிய ஊராட்சி மன்ற தலைவர்கள் கலந்து கொண்டனர். ■

காஞ்சிபுரம்

ஒருங்கிணைப்புக் கூட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், மொறப்பாக்கம் ஊராட்சியில் 20.09.2014 அன்று புதுவாழ்வு திட்ட மாநில வல்லுநர் முனைவர் ஏ. புருஷோத்தமன் அவர்கள் தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மதுராந்தகம் கோட்ட கால்நடை பராமரிப்புத்துறை, மேல்மருவத்தூர் கால்நடை அறிவியல் பல்கலைக் கழகம் மற்றும் ஆராயச்சி மையம் மற்றும் ஆவின் பால் நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் அலுவலர்கள் கலந்து கொண்டு, கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி, குடற்புழு நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், கருத்து கண்காட்சி, கால்நடை வளர்ப்பு மற்றும் பால் மதிப்புக் கூட்டுப் பொருட்கள் குறித்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 250க்கும் மேற் பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியும், 100க்கும் மேற்பட்ட கன்றுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சையும் அளிக்கப்பட்டது. புதுவாழ்வு திட்ட மாவட்ட திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர், டாக்டர். பிரேமலதா, டாக்டர். ராஜ்முகமது, டாக்டர். நதியா, டாக்டர். டில்லிபாபு, புதுவாழ்வு திட்ட பால்வள ஆலோசகர் டாக்டர். ஏ. அம்பேத்கர், ஆர். பிரபு மற்றும் திட்டப்பணியாளர்கள் கலந்து கொண்ட இக்கூட்டம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. ஆர். புண்ணியவதி நன்றியுரையுடன் நிறைவுற்றது. ■

இப்பயிற்சியில் தீவன புல் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை, இரசாயன பூச்சிக் கொல்லி மருந்துகளினால் ஏற்படும் தீமைகள் மற்றும் இயற்கை முறையில் வேளாண்மை செய்தலின் நன்மைகள் போன்றவை குறித்த பயிற்சிகளை, வேளாண்மைத் துறை வல்லுநர்களால் வழங்கப்பட்டது.

வேலூர்

நிலைத்த வேளாண்மைத் திட்டம் குறித்த பயிற்சி

வேலூர் மாவட்ட புதுவாழ்வு திட்டம் சார்பில், குடியாத்தம் லட்சுமி ஹயக்கிரீவர் மஹாலில் 08.10.2014 மற்றும் 09.10.2014 ஆகிய இரண்டு நாட்கள் ஊரக வளர்ச்சிக்கான நிலைத்த வேளாண்மைத் திட்டம் குறித்த பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் 21 ஊராட்சிகளைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியினை விரிஞ்சிபுரம் வேளாண்மை அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் திரு. பாண்டியன், வேலூர் கால்நடைத்துறை உதவி இயக்குநர் டாக்டர். மணி, வேளாண்மை அலுவலர்கள் திரு. சண்முகம், திரு. சக்திவேல், டாக்டர் சுகந்தி, இயற்கை வேளாண்மை ஆர்வலர் திரு புருஷோத்தமன் ஆகியோர் வழங்கினர். இப்பயிற்சியில் சிறப்பு விருந்தினர்களாக புதுவாழ்வு திட்ட மாநில வல்லுநர் திரு மணி, மாவட்ட திட்ட மேலாளர் திருமதி. பத்மாமணி ஆகியோர் கலந்து கொண்டனர். வேளாண்மை அலுவலர் திரு. சம்பத், கால்நடை ஆலோசகர் டாக்டர் மோகன்தாஸ், உதவித் திட்ட மேலாளர் திரு. ரமேஷ் ஆகியோர் இப்பயிற்சியினை ஒருங்கிணைத்தனர். ■

கடலூர்

பயிற்சி நிறுவனம் மதிப்பீடு

கடலூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிகள் வழங்கும் நிறுவனத்தினை 01.10.2014 அன்று மாநில புதுவாழ்வு திட்ட நுண்நிதி வல்லுநர் திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள் மதிப்பீடு செய்தார். இந்நிகழ்வின் போது கடலூர் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. கருப்பையா மற்றும் உதவித் திட்ட மேலாளர் திரு. பா. மனுநீதி சோழன் ஆகியோர் உடனிருந்தனர். ■

மகளிரின் முகவரியாய் முற்றம்...!

முற்றம் இதழ் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	– ரூ. 100/–
இரண்டு ஆண்டு சந்தா	– ரூ. 150/–
மூன்று ஆண்டு சந்தா	– ரூ. 250/–
நான்கு ஆண்டு சந்தா	– ரூ. 300/–
ஆயுள் சந்தா	– ரூ. 600/–
புரவலர் கட்டணம்	– ரூ. 15,000/–

சந்தாத் தொகையை ‘முற்றம்’ என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தக்க முறையில் வங்கி வரைவோலையாக மட்டுமே அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையுடன், சந்தாதாரரின் பெயர், க/பெ. (அ) த/பெ., குழுவின் பெயர், வீட்டு எண், தெரு எண், கிராமத்தின் பெயர், தாலுக்கா பெயர், மாவட்டத்தின் பெயர் ஆகியவற்றுடன் அஞ்சல் குறியீட்டு எண்ணையும் (பின்கோடு எண்) தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். முற்றம் சந்தாக்களுக்குரிய புத்தகம் அந்தந்த நபருக்கு அனுப்ப வேண்டுமா? அல்லது மொத்தமாக எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதை தெளிவாகக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.

கோமாதா பால் உற்பத்தி பூச்சரத்தின் வெண்மைப் புரட்சி

புதுவாழ்வு

சேலம் மாவட்டம், வாழப்பாடி ஒன்றியம், விலாரிபாளையம் ஊராட்சியில் மக்கள் நிலை ஆய்வின் மூலமாக இலக்கு மக்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் சார்பில் பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு வருகிறது. புதுவாழ்வு திட்டம் வாயிலாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும், சுய உதவிக் குழு உறுப்பினர்களின் அவசர தேவைகளுக்கும் மற்றும் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காகவும் அமுதசுரபி கடன் வழங்கப்பட்டது.

அமுதசுரபி நிதியில் கறவை மாடு வாங்குவதற்கு கடன் பெற்ற 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைக் கொண்டு விலாரிபாளையத்தில் 'கோமாதா பால் உற்பத்திப் பூச்சரம்' துவக்கப்பட்டது. புதுவாழ்வு திட்டத்தின் மூலம் இந்த பூச்சரத் தின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக 95,000/– ரூபாய் வழங்கப்பட்டது. ஆரம்ப நிலையில் 18 கறவை மாடுகள் மூலம் 46 லிட்டர் பால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு, மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் விலாரிபாளையம் கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்கள் வங்கியில் பெற்றக் கடனை முறையாகத் திரும்பச் செலுத்தியதால், 2013ஆம் ஆண்டு நபார்டு வங்கியின் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மூலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூ. 42 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது. இந்தத் தொகையினைக் கொண்டு கறவை மாடுகள் வாங்க 168 உறுப்பினர்களுக்கு தலா ரூ. 25 ஆயிரம் வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டது. கடன் பெற்ற அனைத்து உறுப்பினர்களும் கறவை மாடுகள் வாங்கி, பால் உற்பத்தி செய்து பூச்சரத்திற்கு வழங்கத் துவங்கினார்.

பால் உற்பத்தி அதிகமான காரணத்தினால் பூச்சரத் தின் நிர்வாகிகள், தனியார் பால் நிறுவனங்களிடம் கலந்து பேசி அதிக விலைக்கு பாலினை விற்பனை செய்கின்றனர். இந்த கிராமத்தில் நான்கு பால் சேகரிப்பு மையங்கள் தனியார் பால் நிறுவனங்களினால் அமைக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை பெறுவதற்கு பூச்சரத்தின் வாயிலாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. மேலும் 3 மாதத்திற்கு ஒருமுறை கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்பட்டு, அனைத்து கறவை மாடுகளுக்கும் தக்க சமயத்தில் தடுப்பூசி, சினை ஊசி போன்றவை போடப்படுகிறது. கன்றுகள் பாரமரிக்கவும் பயிற்சி வழங்கப்படுகிறது. அனைத்து மாடுகளுக்கும் காப்பீடும் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

பூச்சரத்தின் உறுப்பினர்கள் வழங்கும் பாலிற்கான தொகை வாரந்தோறும் கணக்கிடப்பட்டு வழங்கப் படுகிறது. பூச்சரத்தின் வரவு செலவுகள் முறையாகப் பராமரிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் விலாரிபாளையம் கிராமத்தில் பூச்சரத்துக்கு சொந்தமாக பால் குளிரூட்டும் நிலையம் அமைத்து, உறுப்பினர்களுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதே விலாரி பாளையம் கோமாதா பால் உற்பத்தி பூச்சரத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் இலட்சியமாகும். ■

அமுதசுரபி நிதியில் கறவை மாடு வாங்குவதற்கு கடன் பெற்ற 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைக் கொண்டு விலாரிபாளையத்தில் 'கோமாதா பால் உற்பத்திப் பூச்சரம்' துவக்கப்பட்டது.

உலக வங்கி ஆலோசகர் ஆய்வு

உலக வங்கி ஆலோசகர் திருமதி. ரம்யா பார்த்தசாரதி அவர்கள் புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி ஒன்றியம், ரெகுநாதபுரம் களப்பகுதிக்குட்பட்ட பாப்பாபட்டி ஊராட்சியில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார் இந்த ஆய்வில் கால்நடைகள் காப்பீடு, தேசிய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்துதல், கிராம சபைக் கூட்டங்களில் பங்கேற்றல், அரசு நலத்திட்டங்களுக்கான பயனாளிகளை தேர்வு செய்வது போன்றவை குறித்து வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்கள் உலக வங்கி ஆலோசகரிடம் விளக்கிக் கூறினர்.

பின்னர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படும் குளவாய்பட்டி கிராமத்திற்கு சென்று, பெண்கள் மேம்பாடு குறித்தும் ஆய்வு செய்வு செய்யப்பட்டது. முன்னதாக பாப்பாபட்டி கிராம வறுமை ஒழிப்புச் சங்க அலுவலக வளாகத்தில் உலக வங்கி ஆலோசகர் திருமதி. ரம்யா பார்த்தசாரதி, புதுவாழ்வு திட்ட மாநில அலுவலக மாவட்ட திட்ட மேலாளர் திரு. வீரபாண்டியன், புதுக்கோட்டை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. எஸ். வசுமதி ஆகியோர் மரக்கன்றுகளை நட்டனர். ■

உலக வங்கியின் பிரதிநிதி வருகை

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் ஒன்றியம், பரவளூர் களப்பகுதியைச் சேர்ந்த எம். பரூர் ஊராட்சியில் புதுவாழ்வு திட்டத்தின் கார்பாக சுய உதவிக் குழுக்களுக்கான P¡-tracking Survey பயிற்சி நடைபெற்றது. மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. கருப்பையா தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில் உலக வங்கிப் பிரதி நிதி செல்வி. ஸ்ம்ருதி சகாமுரி மற்றும் மாநில புதுவாழ்வுத் திட்ட தகவல் தொடர்பு வல்லுநர் திரு. மோ. கணேஷ்குமார் ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொண்டனர். உதவித் திட்ட மேலாளர் திரு. ப. முத்துவேல் வழிநடத்துனராகவும், டேலி கோர் டீமினைச் சேர்ந்த பிரகாஷ் மற்றும் ராஜலட்சுமி மற்றும் பரவளூர் களப்பகுதி பணியாளர்கள் பங்கேற்பாளர்களாகவும் பங்கு கொண்டனர்.

இப்பயிற்சியில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், கூட்டமைப்பு, சுய உதவிக் குழு ஆகியவற்றின் உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகள், சுய உதவிக்கு குழு, கூட்டமைப்பு, மக்களின் வாழ்க்கை முறை, பெண் கல்வி, வங்கி நடவடிக்கைகள், தொழில் ஈடுபாடு, உணவு பழக்க வழக்கங்கள், சுகாதாரம், குழந்தைத் திருமணத்தால் ஏற்படும் தீமைகள், கழிப்பறை பயன்படுத்துதல், கணினிப் பயன்பாடு, உடல்நலம் போன்றவை குறித்து மக்களிடம் கலந்தாய்வு செய்து கருத்துக் கேட்கப்பட்டதுடன், படவிளக்கக் காட்சிகள் மூலமும் விளக்கப்பட்டது. மேலும் CSTகள் மேற்கொண்டுவரும் பணிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. ■

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகள், மக்களின் வாழ்க்கை முறை, பெண் கல்வி, சுகாதாரம், கழிப்பறை பயன்படுத்துதல், கணினிப் பயன்பாடு, உடல்நலம் போன்றவை குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

குளக்கரை கெண்டை மீன் வளர்ப்பு

மீன்களை வளர்க்கும் குளங்களுக்கு சுண்ணாம்பு இடுவது பல்வேறு நல் விளைவுகளை ஏற்படுத்துகிறது.

நன்மைகள்

நீருக்கு போதுமான கார, கடினத்தன்மைகளை அளித்தல்

நச்சுயிரிகளை அழித்தல்

குளத்தின் அடிப்பகுதியில் ஏற்படும் நச்சுத் தன்மைகளை குறைத்தல்

நீருக்கு ஓரளவு நிலையான கார, அமிலத்தன்மையை அளித்தல்

நீரில் கலங்கள் தன்மையையும், பாசிப் படர்வுகளையும் குறைத்து, நீரில் ஒளி ஊடுருவும் ஆழத்தை அதிகரித்து, அதிக அளவில் உயிர் வளி உற்பத்தி ஏற்படுத்துதல்

இடும் அளவு

மீன் வளர்ப்பு குளங்களுக்கு இட வேண்டிய சுண்ணாம்பின் அளவு, மண்ணின் கார அமில நிலை, குளங்களில் சேரும் கழிவுகளின் அளவு போன்றவற்றிற்கு ஏற்ப மாறுபடுகிறது. மிதமான கார, அமிலத்தன்மை கொண்ட மண்ணிற்கு, ஏக்கருக்கு 80 முதல் 120 கிலோ சுண்ணாம்பு பரிந்துரைக்கப்படுகிறது. உழவு செய்தபின் குளங்களில் பரவலாக சுண்ணாம்பை தூவி விட வேண்டும். குளத்தின் பள்ளமான பகுதிகளிலும், வண்டல் கழிவுகள் அதிகம் சேரும் இடங்களிலும் அதிக அளவில் சுண்ணாம்பு இட வேண்டும். இதனால் மீன்கள் நன்கு வளரும்.

நல்ல மேலாண்மை செய்யப்பட்ட குளத்திலும் மீன் இறப்பு விகிதம் குறைந்தாலும், ஒட்டுண்ணிகளால் மீனின் வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

களை மீன்கள் மற்றும் பகை மீன்களை அழித்தல்

களை மீன்கள் மற்றும் பகை மீன்கள் இருக்கின்ற குளங்களில் வளர்ப்பு மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதற்கு முன்பு இழுவலையைக் கொண்டு தேவையற்ற மீன்களை அழிக்க வேண்டும். இல்லை எனில் வளர்ப்பு மீன்களின் எண்ணிக்கை குறைந்து விடும். இழுவலையால் களை மீன்களை அழிக்க இயலவில்லையெனில், மீன் கொல்லிகளை பயன்படுத்தலாம். இலுப்பைப் புண்ணாக்கு, பிளீச்சிங் பவுடர் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.

மீன் கொல்லிகளைப் பயன்படுத்தும் போது அவற்றை குளங்களுக்கு சாயமிடுவதற்கு முன்னரே போட வேண்டும். பூச்சிக்கொல்லியின் விஷத்தன்மை சுமார் இரண்டு அல்லது மூன்று வார காலம் நீரில் இருக்கும். எனவே குளத்தில் மீன்கொல்லிகளின் நச்சுத்தன்மை முழுமையாக நீங்கிய பின்னரே, மீன் குஞ்சுகளை இருப்புச் செய்தல் வேண்டும்.

உரமிடல்

மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதற்கு முதல் நாள் இரவு, மொத்த உரத்தில் 20% முதல் 25% வரை குளத்தில் இட வேண்டும். மீதமுள்ளவற்றை சம அளவில் சரியான கால இடைவெளியில் இட வேண்டும்.

சுகாதார மேலாண்மை

மீன் குஞ்சுகளை இருப்பு செய்யும் முன் அவற்றை 3–5% அடங்கிய பொட்டாசியம் ஃபர்மாங்கனேட் கலந்த நீரில் 15 நொடிகள் குளியல் சிகிச்சை செய்திருக்க வேண்டும். அதிக அளவில் மீன்களை இருப்பு செய்யும் போது நோய் தொற்று ஏற்படுவது இயல்பே. எனவே அதற்கு தக்க பாதுகாப்பு முறையைக் கையாள வேண்டும். ■

(தொடரும்)

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (76,000 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

சுகாதாரமாய் வாழ்ந்திடுவோம்! உடல் நலத்தை காத்திடுவோம்!!

✓ செய்ய வேண்டியவை



மலம் கழிக்க கழிப்பறையை பயன்படுத்துங்கள்.

கைகளை சோப்பால் கழுவுங்கள்.



காலை – இரவு பல் துலக்குங்கள்.

செய்யக்கூடாதவை ✗



திறந்த வெளியில் மலம் கழிக்காதீர்கள்.

நீரை காய்ச்சாமல் பருகாதீர்கள்.

மூடப்படாத உணவை உண்ணாதீர்கள்.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 20.10.2014



ஆலமரமாய்...

இன்று 2014ல்

சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே தன்னம்பிக்கையும், பேச்சுத் திறனும் மேம்பாடு அடைந்துள்ளது.

அரசின் நலத்திட்டங்களில் ஏழை மகளிரிடையே பங்கேற்பும், அவற்றை பற்றிய விழிப்புணர்வும் உயர்ந்துள்ளது.

பல்வேறு வகையான பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொண்டதால், அவர்களின் பொருளாதாரம் உயர்ந்துள்ளது.

சாதி, சமய தடைகளை தகர்த்தெறிந்து மகளிர் ஒன்றுபட்டுள்ளனர்.

கிராம சபை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மகளிரின் பங்கேற்பும் உயர்ந்துள்ளது.

வங்கிகளின் பார்வையில் சுய உதவிக் குழுக்களின் நம்பகத்தன்மை உயர்ந்துள்ளதால், சுலபமாக வங்கிகளிடமிருந்து கடன் பெறும் நிலை அதிகரித்துள்ளது.

அதிக அளவில் கந்து வட்டி முறை ஒழிக்கப்பட்டுள்ளது.

கார்பரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல்: indmail@indianbank.co.in
கட்டணமில்லா தொலைபேசி: 1800 425 00 000
இணையதளம்: www.indianbank.in

इंडियन बैंक
இந்தியன் வங்கி
உங்கள் தொழில்நுட்பநேய வங்கி